Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 07 சனிக்கிழமை (21.06.2014) பக்கங்கள் 20 ஓசை - 263

AXSHAYA CONSTRUCTION JAFFNA

கட்டடங்கள் கட்டுதல். வீடு கட்டுதல்.
பழைய வீடுகளைத் திருத்துதல்.
குளியலறை கட்டுதல்

Plumbing, Electrical, Painting



அனைத்தும் தரமாகவும், குறைந்த விலையிலும், குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்

(C/3690)

தொடர்புக்கு : 0776679564

## யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்



அளுத்கம தாக்குதலைக் கண்டித்து யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக்காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை யாழ். பஸ் நிலையத்தின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## வவுனியாவில் ஆர்ப்பாட்ட முஸ்தீபு இடைநடுவில் கைவிடப்பட்டது

அளுத்கம சம்பவத்தைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்றுப் பிற்பகல் வவுனியா நகர பள்ளிவாசல் முன்னிலையில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தை நடத்தவிடாமல், பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைத் துரத்தியடித்துள்ளனர்.

நண்பகல் தொழுகையை முடித்துக் கொண்டு முஸ்லிம்கள் பள்ளிவாசலைவிட்டு வெளியில் வந்தபோது, அவர்களுடன் இணைந்து பள்ளிவாசலுக்கு எதிரில் திரண்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் ஆர்ப்

(19) ஆம் பக்கம் பார்க்க...

# அமைதிச் சூழலைக் குழப்ப முயற்சிக்கிறதா அமெரிக்கா?

## கிழக்கு கட்டளைத் தளபதி சந்தேகம்


நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதில் அமெரிக்கா பின்னணியாக இருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், மக்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள முக்கியஸ்தர்களை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஏறாவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இலங்கையில் அசாதாரண சூழ்நிலையை உருவாக்குவதில் அமெரிக்கா பின்னணியில் இருந்து வருகின்றது. இதற்காக அமெரிக்கா பண உதவியையும் வழங்கி வருகின்றது. இது விடயத்தில் மக்கள் பொறுப்புணர்ச்சியுடனும் அவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்றார்.

அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுவதற்கு சமூக வலைத்தளங்களும் ஒரு காரணமாகும். செய்திகளை திரிபுபடுத்தி பொய்யான தகவல்களை குறுஞ்செய்தி மூலமும், முகநூல் மூலமும், ஏனைய இணையத் தளங்கள் மூலமும் பரப்பியிருந்தனர். சில திரிபு

(19) ஆம் பக்கம் பார்க்க...

# யாழ்.-கிளிநொச்சி குடிநீர் விநியோகம் கொழும்பில் உயர்மட்ட ஆலோசனை



கிளிநொச்சி மாவட்டத்திற்கான நீர் வழங்கல் திட்டம் மற்றும் யாழ் மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பிலான விரிவான உயர்மட்ட ஆலோசனை ஒன்று நேற்று கொழும்பில் உள்ள நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாவட்ட துறைசார் பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்தனாவைச் சந்தித்து நடத்திய இக்கலந்துரையாடலில், கிளிநொச்சி மாவட்டத்திற்கான நீர் வழங்கல் திட்டம் மற்றும் யாழ்.மாவட்டத்திற்கான குடிநீர் வழங்கும் இரணைமடுத்திட்டம் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

மேற்படி திட்டமானது ஒரு சில குறுகிய சுயநலவாத தமிழ் அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட்டு வரும் இடையூறுகள் காரணமாக தடைப்பட்டிருப்பது மற்றும் இத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மற்றும் குறிப்பாக

(19) ஆம் பக்கம் பார்க்க...

## மொழி ஆய்வு கூடங்கள் பல்கலைக்கழகங்களிலும்

### உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு

மகிந்த சிந்தனையின் எதிர்காலத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது போன்று பல்கலைக்கழகங்களிலும் அனைத்து வசதிகளுடன் கூடிய மொழி ஆய்வுகூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு முழுமையான மொழி ஆய்வுகூடமொன்று நிறுவப்பட்டுள்ளது. 21 ஆம் நூற்றாண்டின் உயர் கல்வி திட்டத்தின் இவ்வாண்டு

(19) ஆம் பக்கம் பார்க்க...

## அளுத்கமவில் நடந்தது என்ன? பூரண விசாரணை வேண்டும்

### மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக பூரண விசாரணைகளை நடத்த வேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. அண்மையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கு எதிரா்க கடுமையான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

மோதல் சம்பவங்களில் நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன், 80 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன் சொத்துக்களுக்கு பாரியளவில்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## தென்னாபிரிக்க மத்தியஸ்தம்; கைவிடுகிறது கூட்டமைப்பு



### சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தீர்வு முயற்சிகளின் போது தென்னாபிரிக்காவின் மத்தியஸ்த முயற்சிகளும் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதனால் இந்த முயற்சிகளைத் தொடர்வதில் பயன் ஏதும் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அமெரிக்காவிற்கு விளக்கம் அளித்துள்ளது. இதன் போதே சம்பந்தன் மேற்படி கருத்துக்களை தெளிவுபடுத்தினார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

தென்ஆசியாவிற்கான அமெரிக்காவின் பிரதித் துணைச் செயலாளர் அதுல் காசியாப் தலைமையிலான பிரதிநிதிகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான பிரதிநிதிகள

(19) ஆம் பக்கம் பார்க்க...

## மத வன்முறைகளை தடுக்க வேண்டும்



### பிரித்தானியத் தூதுவர் கோரிக்கை

(கொழும்பு)

மத வன்முறைகளைத் தாமதம் இன்றிக்கட்டுப்படுத்த இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும் என்ற இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார். ஐக்கிய

(19) ஆம் பக்கம் பார்க்க...

## பள்ளிவாசல் மீது தாக்குதல்; கண்டியில் நேற்று சம்பவம்

கண்டியில் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றின் மீது பொதுபல சேனா ஆதரவாளர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கண்டி, குருந்துகொல்லை பிரதேசத்தில் உள்ள ஜும்ஆ பள்ளிவாசலின் மீது நேற்று இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் கற்கள் மற்றும் தடிகளை வீசி பள்ளிவாசலின் கண்ணாடி ஜன்னல்களையும், மின் விளக்குகளையும் உடைத்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பான தக

(19) ஆம் பக்கம் பார்க்க...

உள்ளே
க.பொ.த. (உ/த)
இரசாயனவியல் வினாத்தாள்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## இராமநாதன் நுண்கலைக் கழகம்

நுண்கலைமாணி - சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2013/2014

தகுதிகாண் (செய்முறை/எழுத்துப்) பரீட்சை

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் (செய்முறை/எழுத்துப்) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை செய்முறை | 30.06.2014 திங்கள்<br>01.07.2014 செவ்வாய்<br>02.07.2014 புதன்<br>03.07.2014 வியாழன்<br>04.07.2014 வெள்ளி<br>05.07.2014 சனி | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம், சுன்னாகம. | மு.ப. 9.00- பி.ப. 4.00 |
| நடனம் செய்முறை | 30.06.2014 திங்கள்<br>01.07.2014 செவ்வாய்<br>02.07.2014 புதன்<br>03.07.2014 வியாழன்<br>04.07.2014 வெள்ளி<br>05.07.2014 சனி | நடேசர் அரங்கு, இராமநாதன நுண் கலைக்கழகம் மருதனார்மடம் சுன்னாகம். | மு.ப. 9.00- பி.ப. 4.00 |
| சித்திரமும் வடிவமைப்பும் எழுத்துப் பரீட்சை | 04.07.2014 வெள்ளி | இராமநாதன் மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி<br>பேராசிரியர் மகேஸ்வரன் மண்டபம்<br>பேராசிரியர் மகேஸ்வரன் மண்டபம் இரசாயனவியற்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி. | மு.ப. 9.00 |
| சித்திரமும் வடிவமைப்பும் செய்முறை. | 14.06.2014 திங்கள்<br>15.07.2014 செவ்வாய்<br>16.07.2014 புதன்<br>17.07.2014 வியாழன் | இராமநாதன் நுண்கலைக் கழகம் மருதனார்மடம் சுன்னாகம் | மு.ப. 9.00- பி.ப. 3.45 |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை அனுப்பப்பட்டவர்களது பெயர் விபரத்தை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அனுமதிகள் கிளையிலும், www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் காணலாம்.

குறிப்பு

2013 க.பொ.த. உ/த பரீட்சையில் இசை அல்லது நடனம் அல்லது சித்திரம் ஆகிய பாடங்களில் “C” தரத்திற்கு குறைவான பெறுபேறு பெற்றவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக்குறைந்த தகைமை “No” எனக் கொண்டிருப்பவர்களும் தகுதிகாண் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

சித்திரமும் வடிவமைப்பும் செய்முறைப் பரீட்சைக்கு கெண்டுவர வேண்டிய பொருட்கள்

Drawing Board (Minimum Size 18’ X 12’)

| | |
|---|---|
| Ruler | Drawing Pins |
| Pencil (6B, HB) | Poster Colour |
| Water Colour | Eraser |
| Pallet (For Water Colour) | Sharpener |
| Water Container | Brushes |

அனுமதி அட்டைகள் தபாலில் கிடைக்காத விண்ணப்பதாரிகள் 27.06.2014 ஆம் திகதிக்கு முன் உதவிப்பதிவாளர்/அனுமதிகள் கிளையுடன் 021 222 6714 என்ற தொலைபேசி எண் வழியாக தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
20.06.2014

(C/3714)

# மாயவனூர் கிராமத்தின் மேம்பாட்டில் அதிக கரிசனை கொண்டுள்ளோம்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன்

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களைஅதிகமாகக் கொண்டுள்ளமாயவனூர் கிராமத்தின் மேம்பாட்டிலும் அம்மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிலும் அதிககரிசனையோடு செயற்பட்டு வருகின்றோம் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று வட்டக்கச்சி மாயவனூர் கிராமமக்களுக்கு வாழ்வாதார மாக கறவைப்பசுக்களை வழங்கிய பின் அம்மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அங்குஅவர் மேலும் குறிப்பிடுகயில்.

மாயவனூர் கிராமத்தின் உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் அங்குள்ளமக்களின் வாழ்வாதார மேம்பாடு போன்றவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் பணிப்பிற்கமைவாகபலதிட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் அக்கிராமம் மீள் குடியேற்றகாலத்துடன் ஒப்பிடுகையில் இன்று பாரிய முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

அப்பகுதிமக்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துதல் வாழ்வாதாரத்தை வளப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளுக்கும் நேற்று முன்னுரிமை அடிப்படையில் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் அக்கிராமத்தின் அபிவிருத்தியிலும் மேம்பாட்டிலும் நாம் கரிசனையோடுசெயற்படத்தயாராக உள்ளோம் எனத்தெரிவித்தார்.

நேற்று வட்டக்கச்சி மாயவனூர் கிராமத்தைச் சேர்ந்தசுமார் 12 பயனாளிகளுக்கு வாழ்வாதாரதிட்டமாக ஒவ்வொன்றும் சுமார் 40 ஆயிரம் ரூபாபெறுமதியான கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டன. சோ.ஆ.நிறுவத்தின் அனுசரணையில் குறித்த கிராமத்தில் வாழ்வாதாரசெயற்திட்டம் வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களில் கால்நடை வளர்ப்பிற்காக விண்ணப்பித்த 12 குடும்பங்களுக்கே நேற்று கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டன

இவற்றை வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் வழங்கினார். கரைச்சி பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ராஜன், சோ.ஆ.நிறுவனத்தின் திட்டஅலுவலர் ரேகன் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரி பிரதேச அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்கள் பயனாளிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



## பரிசளிப்பு விழா

வல்வெட்டித்துறை கம்பர்மலை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மு.இரவீந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

### வீடு விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற் போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. அரச ஊழியர், வங்கி, ஊழியர், பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானமுள் ளோர்க்கு முன்னுரிமை வழங்கப் படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவறட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு.

(R/352)

### வேலைவாய்ப்பு

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர் பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000 ரூபா தொடக்கம் 35,000 வரை. தங்குமிடம். உணவு, பயிற்சியும் வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 077 596 4299

(C/3715)

★ ★ ★ ★ ★

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துக்கு 24,000 ரூபா தொடக்கம் 38,000 ரூபா வரை. வருகைதரும் தினமே சேர்த்துக் கொள்ளப்படுவார். (உற்பத்தி, பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 077 085 4068

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1067

திகதி 19.06.2014

வெற்றி எண்கள் 04 20 50 63 ஆங்கில எழுத்து W

ஜக்பொட் பரிசு ரூ. 3,14,06,780/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,14,06,780/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5 | 50,000/= | ரூ. 2,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 253 | 1,000/= | ரூ. 2,53,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 426 | 1,000/= | ரூ. 4,26,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11578 | 60/= | ரூ. 6,94,680/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6034 | 40/= | ரூ. 2,41,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151180 | 20/= | ரூ. 30,23,600/= |
| ஆங்கில எழுத்து | 21947 | 20/= | ரூ. 4,38,940/= |
| | | மொத்தம் ரூ. | 63,27,580/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 706400156-7-27 |
| கம்பஹா | 706409470-5-45 |
| கொழும்பு | 706414849-9-49 |
| காலி | 706414064-3-23 |
| மட்டக்களப்பு | 706411323-7-37 |
| கண்டி | 706413149-4-14 |
| கொழும்பு | 706408460-2-32 |
| மாத்தறை | 706403745-8-08 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 67,27,580/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 31,702,580/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.06.23 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3 698)

# இனங்களுக்கெதிரான வன்முறை உருவாகுவது தவிர்க்கப்படவேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மை இனங்களுக்கு எதிராக வன்முறைகள் உருவாகுவதை தவிர்த்து அனைத்து சமூகத்தினரும் சமமாக வாழ்வதற்கான நிலமை-யினை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென யாழ்.பல்கலைக்கழக ·ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அ.இராஜகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுபான்மை இனங்களுக் எதிரான வன்முறைச் சம்பவங்களை கண்டித்து நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்,

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1977 மற்றும் 1983 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சொத்து அழிப்புக்கள், இன அழிப்பு போன்று தற்போது முஸ்லிம் மக்கள் மீதும் கட்டவிழந்து விடப்பட்டுள்ளது.

இலங்கையில் சுதந்திரம் இருக்கின்றது அனைத்து மக்களும் சமமாக வாழ்கின்றார்கள் என்று அரசாங்கம் சொல்லிக் கொண்டு இருக்கின்றது. ஆனால் முஸ்லிம் மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்தி விடும் நிலைமை காணப்படுகின்றது.

இதன் பின்புலத்தில் யார் இருக்கின்றார்கள் என்பது தெரியாது. ஆனால் இந்த வன்முறைச் சம்பவங்களின் பின்புலத்தில் பலம் பொருந்தியவர்கள் இருக்கின்றார்கள் என்பது புலப்படுகின்றது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். அதேவேளை குற்றவாளிகள் இனங்காணப்பட்டு, உடனடியாக தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் வன்முறைகள் மேற்கொள்பவர்கள் இனங்காணப்படுவது குறைவு. ஏதோ ஒரு சாக்குப் போக்குச் சொல்லி ஆணைக்குழு நியமித்து காலத்தினை தள்ளிப் போகச் செய்வார்கள்.

இவ்வாறான நிலை நீடிக்குமானால், இலங்கையில், சமாதானம் என்பது கேள்விக்குறியாகிவிடும். எனவே, இலங்கை இன, மொழி பாகுபாடற்ற நாடாக மாற வேண்டும்.

சிறுபான்மை, பெரும்பான்மை எனப் பார்க்காது உடனடியாக வன்முறைகளை நிறுத்தி அவலப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களுக்கு நிவாரணிகளை வழங்கி முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறையாளர்களை கண்டு பிடித்து கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (25)

# உதவிச் செயலாளராக நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஹாட்லிக்கல்லூரியில் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவை தரம் II ஐச் சேர்ந்த அதிபர் நடராசா தெய்வேந்திரராஜா வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1999 இல் இருந்து 2005 வரை தெஹியொவிற்ற வலயக்கல்விக் காரியாலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார். இவர் யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், யா/ஹாட்லிக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். இவர் 05.12.2005 இல் இருந்து தற்போது வரை ஹாட்லிக்கல்லூரி அதிபராக கடமையாற்றியுள்ளார். பேராதனைப்பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானப்பட்டதாரியுமாவார். இவருக்கு நியமனக் கடிதத்தை வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் வழங்கிவைத்தார்.

# இலக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

உயில் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் "எனக்குப் பிடித்த படைப்பு - வாசக அனுபவம்" என்னும் இலக்கியச் சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வதிரிவடக்கு மெ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் கவிஞர் ந.மயூரரூபன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் த.அஜந்தகுமார், யாத்திரிகன், தானா விஷ்ணு, சி.விமலன், சு.குணேஸ்வரன், கே.ஆர்.திருத்துவராஜா, குப்பிளான் ஐ.சண்முகம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். நிறைவுரையை இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்துவார். (90)



யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டு 18 ஆண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப்படைத் தலைமையகத்தினால் பல்வேறு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன் ஒரு நிகழ்வாக யாழ்.போதனாவைத்தியசாலை வளாகத்தில் படையினர் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளமையினைக் காணலாம். (பா)

# சித்தார்த்தரைக் கண்டியளோ...






நேற்றிரவு பதறியடிச்சுக் கொண்டு நடுச்சாமத்தில அவசரமாகத் தொலைபேசியில கூப்பிட்டார் ஒரு வெளிநாட்டுவாசி. ஆள் புளொட்டின்ரை பழைய காய். நாடு, போராட்டம் எண்டதெல்லாத்தையும் விட்டிட்டுத் தூரப்போனாலும் அரசியல் தொடர்புகளை மட்டும் சிங்கன் கைவிடேல்லை. 'கரண்ட் பொலிற்றிக்ஸ்ஸிலை' எப்பவும் வலு ஆர்வமான ஆள்.

தூரப்போனாலும் தொப்புள்கொடி உறவாக இந்தக் 'கரண்ட் பொலிற்றிக்ஸ்'தானே புலம்பெயர்வாசிகள் கனபேருக்கு இருக்கு! அதில இருந்து இவரும் தப்பேல்ல.

சரி எப்பிடியோ இந்த நேரத்தில அவதிப்பட்டுக்கொண்டு போன் எடுக்கிறார் எண்டால்... என்ன ஏதெண்டு தெரியாமல் நானும் கொஞ்சம் பதறித்தான் போனேன்.

எடுத்தவர் கேட்டார், 'சித்தார்த்தண்ணை எங்கயண்ணை?' எண்டு.

'ஏன்? அவருக்கென்ன? உங்கினைதான் எங்கேனும் நிப்பார்' எண்டன்.

'அண்ணை விளையாடாதேங்கோ... நான் உண்மையாகத்தான் கேட்கிறன். ஆள் எங்க? போன் அடிச்சாலும் தூக்கிறாரில்லை. ஆளைப்பற்றின சேதிகள் ஒண்டையும் காணேல்ல. ஆளுக்கு என்ன நடந்திது?' எண்டு பதறிக்கொண்டிருந்தார்.

அதுக்குப் பிறகுதான் நானும் கொஞ்சம் நிதானமாக யோசிச்சன்.

'சித்தார்த்தன் எங்கே?'

சித்தார்த்தனைக் காணேல்லைத்தான். வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பிறகு ஆளின்ரை சிலமன் இல்லை. அதுவும் யாழ்ப்பாணத்தில மூன்றாவது கூடின வாக்குகளை எடுத்தவர், பேசாமல் பறையாமல் எங்க போட்டார்?

இடையில பதவி பிரமாண நேரத்தில நாலைஞ்சு நாள் பேர் அடிபட்டுது. பிறகு மாகாண சபை வாசலில கூட்டமைப்புக்காரரோட பலதும் பத்துமாக – பத்தில் ஒன்றாக நிண்டார்.

இப்ப அதையும் காணேல்ல.

அதுக்கு முந்தி புளொட்டின்ரை தலைவர் எண்டோ உடுவில் தருமற்றை (உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கத்தின்ரை) மகன் எண்டோ, தமிழ் அரசியலில கொஞ்சம் நிதானமாகச் சிந்திக்கக் கூடிய ஆள் எண்டோ ஒரு மரியாதையோட நாலு பேருக்கு முன்னால் மதிப்பாகத் திரிஞ்சார்.

ஆளை அடிக்கடி எங்கயாவது காணலாம். அல்லது நாலு பேரோட பாக்கலாம். நாங்களும் நேரில போய்க்கதைக்கலாம். இல்லாட்டிலும் அங்க, இங்க எண்டு சந்திப்பார்.

இப்ப இந்த மாகாணசபையில காலை வைச்சதோட காலையும் கையையும் கட்டி, வாய்க்கும் பிளாஸ்ரர் ஒட்டிவிட்டதைப்போல சத்தம் சலாரில்லாமல் இருக்கிறார்.

நேற்று முந்தநாள் வந்த சின்னப்பெடியள் எல்லாம் கிலுக்கியடிக்கிறாங்கள்...

இவர் முப்பது முப்பத்தஞ்சு வருசத்துக்கு முந்தியே போர்க்களத்தில குதிச்சு, இத்தினை காலமாக நீச்சலடிச்சு, முக்குளிச்சு, படாத பாடெல்லாம் பட்ட ஆள்...

கோப்பாயில இருந்த் பத்துப் பதினைஞ்சு ஏக்கர் தன்ரை சொந்தக் காணியை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அமைக்கிறதெண்டு அன்பளிப்பாக எழுதிக்குடுத்தவர்....

போதாக்குறைக்கு தன்ரை மாகாணசபைச் சம்பளத்தையும் ஆதரவில்லாத – வசதி குறைஞ்ச பிள்ளையளின்ரை படிப்புக்கெண்டு குடுத்துக் கொண்டிருக்கிற மனிசன்...

தகப்பன் தருமர் கூட மதிப்பும் மரியாதையுமாக அரசியல் தொண்டு செய்து பேரெடுத்த ஆள்.

இப்பிடியெல்லாம் இருந்தும் இப்ப சித்தார்த்தன் பேசாமல் – வாயைத்திறக்க முடியாமல் இருக்கிறாரெண்டால்....?

இதுதான் சேராத இடம் சேர்ந்தால் வராது வந்து சேரும் வினையெண்டு சொல்லிறதாக்கும்...

சித்தார்த்தனுக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பொருந்தேல்ல.

அங்க (கூட்டமைப்பில) இருந்து கொண்டு இவர் தன்ரை அரசியலைக் கதைக்கேலாது. தன்ரை அரசியலைக் கதைக்கிறதெண்டால் இவர் அங்க (கூட்டமைப்பில) இருக்கேலாது.

கூட்டமைப்பில இருக்கிறதெண்டால் புலிவாலைப் பிடிச்சுக்கொண்டிருக்கோணும். ஒரு காலமுமே நடக்க முடியாத விசயங்களைப் பற்றிக் கதைக்கோணும். சனங்களுக்குக் காதில பூ வைக்கோணும். அந்தா அது ஐ.நா வருது, இந்தா இது இந்தியா பாத்துக்கொண்டிருக்குது எண்டு எப்பவும் ஏதாவது படங்காட்டிக் கொண்டிருக்கோணும். ஏதாவது தகிடு தித்தம் பண்ணிக் கொண்டேயிருக்கோணும்...

இதெல்லாம் சித்தார்த்தனுக்குச் சரிவருமோ...!

அதால ஆள் பேசாமல் பறையாமல் எங்கயோ மூலைக்குள்ள போய் ஒடுங்கீட்டுது.

யுனெஸ்கோவின்ரை விருதை வாங்கின ஆனானப்பட்ட ஆனந்தசங்கரியையே தூக்கிச் சாப்பிட்ட – ஆளை மூலைக்குள் முடக்கிக் களைப்படைய வைச்சுக் களத்தை விட்டே அகற்றிய தமிழ்த்தேசியம், சித்தார்த்தனை விட்டு வைக்குமா?

சித்தார்த்தனுக்கு ஒரேயொரு அறிவுரை சொல்லலாம், வெட்கத்தையெல்லாம் விட்டுப்போட்டு, கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் நீங்களும் புலிவாலைப் பிடியுங்கோ... உங்களோட இருந்த பெடியள்தான் கொஞ்ச நாளைக்குக் கண்ணுக்குள்ளயும் மனசுக்குள்ளயும் நினைவுக்குள்ளயும் வருவாங்கள்...

அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா...

சந்தேகம், நம்பிக்கைக்கு எதிரானது அல்ல. அதன் ஒரு பாகமே. - உளநோக்கு.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அயலானை உனக்குள் தேடு!

நமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களைப் பார்க்கும் போது, மாற்று அடையாளமுள்ள மனிதனைச் சகித்துக்கொள்ள முடியாத வெறுப்பு, வன்மம், வக்கிர உணர்வுகளையெல்லாம் தூண்டிவிடும் மத போதனைகள், ஊடக போதனைகள், தேசப்பற்று மொழிப்பற்று இனப்பற்று போதனைகள் குறித்து நாம் கவலையடையும்படியே இருக்கிறது.

இது உலகம் முழுவதிலுமுள்ள போக்காக நாம் அங்கங்கே கண்டிருந்தாலும், நம்மைப் போன்ற நாடுகளில் இந்தப் பின்னோக்கியதான நாகரிக உணர்வுகள் குறித்து வெட்கப்படுபவர்களின் விகிதாசாரம் குறைவாக இருப்பது வேதனைக்குரியதே.

இனவாதத்தை, பயங்கரவாதத்தை, வன்முறையை கண்டிப்பது கூட இனரீதியான மதரீதியான காழ்ப்புகளோடு வெளிப்படுகிறதே தவிர, எல்லாத் தரப்பிலுமுள்ள வன்முறையுணர்வாளர்களைத் தனிமைப்படுத்த, எல்லாத் தரப்பிலுமுள்ள நீதிமான்கள் மனிதநேயர்களும் இணைந்துபேச வேண்டிய செயலாற்ற வேண்டிய தேவையை உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

மற்றைய நாடுகளில், உலகத்து மற்ற மற்றச் சமூகங்களில் இத்தகைய வன்மங்களைப் பழிவாங்கல்களை விவேகத்துடன் நடந்து தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அகாசி திரும்பத் திரும்ப இங்கு வந்து சொல்லிச் சென்றதுபோல ஜப்பான் நல்ல உதாரணம். மிகப்பெரிய கொடுமையைத் தாங்கியவர்கள், அதை இழைத்தவர்களுடனேயே இணக்கத்தை ஏற்படுத்தி, பழி மறந்து தங்கள் வாழ்வைச் செழுமைப்படுத்திக் கொண்டார்கள்.

அதுமட்டுமல்ல ஜேர்மனி, வியட்நாம், கம்போடியா என்று பல நாடுகள் பல வருடங்களாக யுத்தக்கொடூரங்களை அனுபவித்தவை. பேரிடர்களைக் கடந்து, அதன் காயங்களை காலத்தால் ஆற்றி, தங்கள் வாழ்வையும் மனதையும் மலர வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டிலுள்ள மூவின மக்களும் அதுபோல் மீளமுடியும். சகோதர மக்களாக வாழமுடியும்.

இது நடந்து முடிந்த யுத்தத்தின் பிறகு ஏற்பட்டிருக்கும் மனோநிலை அல்ல. அதற்கு முன்பிருந்தும் நமது சமூகக் குணாம்சம் என்பது மிகவும் சுயநல மயப்பட்டதாகவே இருக்கிறது. யாரும் சாகலாம், யாரும் இழிவுபடுத்தப்படலாம், எவர்மீதும் எத்தகைய பழிகள் துன்பங்களையும் சுமத்தலாம் எங்களுக்கு லாபம் வருமாக இருந்தால் சரி என்ற ஒரு மனப்பான்மை...

நாங்கள் எங்கள் எல்லோரதும் நலமான வாழ்க்கைக்காக வெறுப்பையும் வன்மத்தையும் சுயநலத்தையும் குறைத்துக் கொள்வது பற்றி யோசிக்க வேண்டும். அதர்மத்தைக் காணச் சகிக்காமல்தான் உறங்கிக்கொண்டேயிருக்கிறேன் என்றவன் கும்பகர்ணன். போர்க்களத்தில் அவன் சாகும் தறுவாய் வந்துவிட்டபோது, ராமன் அவனிடம் வரங்கள் தருகிறேன் கேள் என்கிறான்.

'வீழ்ந்தான் கும்பகர்ணன்' என்ற பெயர் வரக்கூடாது எனக்கு. உன் பாணத்தினால் என் தலை கொய்யப்பட்டு அது கடலில் விழட்டும்; இந்தப் போர்க்களத்தில் விழவேண்டாம். அடுத்த வரமாக, என் தம்பி விபீஷணன் இராவணனை விட்டுவிட்டு உன்னிடம் வந்துவிட்டதைப் போல் மறுபடியும் உன்னைவிட்டுப் போய்விட்டால், இப்போது நீ என் மீது பிரயோகிக்கும் பாணத்தை அவன்மீது பிரயோகித்து விடாதே. பாவம் அவன் அதைத் தாங்க மாட்டான். அவன் உயிரோடு இருக்கும்படி அவனை விட்டுவிடு என்று கேட்டுக்கொள்கிறான்.

சாகும்போதும் அடுத்தவனிடம் கொள்ள வேண்டிய அன்பு பற்றியே இலக்கியங்கள் போதிக்கின்றன. அத்தகைய அன்பினால்தான் வாழ்க்கைக்கு நல்லவிதமான அர்த்தத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும்; வன்மத்தினாலும் பழியுணர்ச்சிகளாலும் அழிவுகளைத்தான் மேலும் மேலும் இங்கே உண்டாக்கிக் கொண்டிருக்க முடியும்.

- ஆசிரியர்

# அடையாள அட்டை பெறமுடியாது சாதாரண தர மாணவர்கள் அவதி

## - அதிபர்களின் அசமந்தமென குற்றச்சாட்டு -

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்காக இம்முறை தோற்றவுள்ள மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை அனுப்புவதில் பாடசாலை அதிபர்கள் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக ஆட்பதிவுத் திணைக்களம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என ஆட்பதிவு ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத் குமார தெரிவித்தார்.

ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று 16 வயது பூர்த்தியாகவுள்ள மாணவர்களின் விண்ணப்பங்களை, மே மாதம் 31 ஆம திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கடந்த பெப்ரவரி மாதமளவில் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்ததாக ஆட்பதிவு ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

அதிபர்களின் அசமந்தப் போக்குக் காரணமாக மாணவர்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆண்டின் முதல் காலாண்டில் மீன் ஏற்றுமதியில் அதிகரிப்பு

இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் மீன் ஏற்றுமதி 20 வீதமாக அதிகரித்துள்ளது என மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் முதலாம் காலாண்டில் 95.68 டொலர் (12.384 மில்லியன் ரூபா) வருமானமாக பெறப்பட்டுள்ளது. விவசாயத்துறையுடன் ஒப்பிடுகையில் மீன் ஏற்றுமதி 2014ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஒரு வீதமாக அதிகரித்துள்ளது.

தேயிலை ஏற்றுமதி 14.45 வீதமாகவும் ஆடை ஏற்றுமதி 21 வீதமாகவும் அதிகரித்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீன் ஏற்றுமதியில் படிப்படியான வளர்ச்சி காணப்படுகிறது என்று தெரிவித்த அமைச்சர், 2011 ஆம் ஆண்டு 21876 மில்லியன் ரூபாவும் 2012 ஆம் ஆண்டில் 26363 மில்லியன் ரூபாவும் 2013ஆம் ஆண்டில் 31 792ஆக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டின் இறுதியில் 40 000 மில்லியன் ரூபாவாக மீன் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கையை தான் மேற்கொண்டுள்ளதாகவும் இத்தொகையை 2016ஆம் ஆண்டில் 50000 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கச் செய்யப் போவதாகவும் அமைச்சர் மேலும தெரிவித்தார்.

நான் பதவியேற்கும் போது வருடாந்த மீன் உற்பத்தி 339,000 மெட்ரிக் தொன்னாக காணப்பட்டது. தற்போது 513,000 மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது. இந்தளவு மீன் உற்பத்தி செய்யப்படுவது வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும்.

நான் பதவியேற்கும் போது 43000 ட்ரோலர் படகுகளும் 170 ஆயிரம் மீனவர்களும் இருந்தனர். தற்போது 62,000 ட்ரோலர்களும் 170 ஆயிரம் மீனவர்களும் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பேஸ்புக் வலைத்தளத்திலிருந்து பொதுபலசேனா வெளியேற்றம்

பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் இருந்து பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் ஞானசாரா தேரர் மற்றும் அந்த அமைப்பின் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளன.

பேஸ்புக் சமூக வலைத்தளமே பொதுபலசேனா மற்றும் அதன் செயலாளரின் பிரதான பிரசார இயந்திரமாக இருந்து வந்துள்ளது.

பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் பல வாசகர்கள், மேற்படி அமைப்பு மற்றும் அதன் செயலாளரின் கணக்குகளில் வெறுப்புணர்வுகளை ஏற்படுத்தும் உரைகள் வெளியிடப்படுவதாக செய்த முறைப்பாட்டை அடுத்து, அந்த இரண்டு கணக்குகளையும் நீக்க பேஸ்புக் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் மத ரீதியான அடிப்படைவாத அமைப்புகளுக்கு ஆதரவாக பல பெயர்களில் பேஸ்புக் வலைத்தளத்தில் கணக்குகள் உருவாக்கப்பட்டு பதிவேற்றப்பட்டு வருகின்றன.

இதனைத்தவிர மேலும் பல கணக்குகளின் முனபக்கங்களை பேஸ்புக் தடைசெய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பொதுபலசேனா போன்ற ஏனைய மதங்கள் மற்றும் இனங்களுக்கு எதிரான கருத்துக்களையும் உரைகளை வெளியிட்டு வரும் பல முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகளின் பேஸ்புக் கணக்குகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

# ஜனாதிபதிப் பதவியில் அமர்வதற்கு ரணிலுக்கு இடமளிக்கமாட்டோம்

## - அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு -

நாட்டில் நடைபெறும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக அமர இடமளிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப பெற்று நாட்டின் ஜனாதிபதியாகலாம் என ரணில் விக்ரமசிங்க எண்ணிக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பல்தேசிய சக்திகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் பயணம் செல்ல முயற்சிப்பாரேயானால் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவும் இதே நிலைப்பாட்டில் இருந்து வருகிறார்.

ஹர்த்தால்களுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை. ஹர்த்தால்கள் நடத்தப்படுவதன் மூலம் நாங்கள் மேலும் மேலும் பலமடைவோம்.

அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்களின் பின்னணியில் ஜிகாத் என்ற முஸ்லிம் அமைப்பு இருக்கின்றது.

அதேவேளை அரசாங்கத்திற்குள் இருப்பதற்கு வெட்கமாக இருந்தால் அமைச்சர் ரவூப் ஹக்கீம அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் கூறியுள்ளார்.

# கால்நடைகளுக்கு கால்வாய்நோய்


தென்மராட்சிப் பகுதியில் தற்போது கால்நடைகளுக்கு கால்வாய்நோய் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் உடனடியாக கால்நடை வைத்திய அதிகாரியை தொடர்புகொள்ளுமாறும் அத்துடன் இறைச்சி,வளர்ப்பு நோக்கங்கள் கருதி கால்நடைகள் கொண்டு செல்வது மறுஅறிவித்தல் வரும் வரை தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(150)

# மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்குமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?

**வே.அர்ச்சுனன்**



**அடுத்த ஜெனிவாத் திருவிழா வரும்போது அந்தக் கொண்டாட்டக் களேபரத்தில் இந்தத் தென்னாபிரிக்க நம்பிக்கைப் பேரொளியை மக்கள் மறந்துபோகச் செய்துவிடலாம். அதுவரைக்கும் தாக்காட்ட இந்த ஈ-மெயில் தீர்வுத்திட்ட தயாரிப்பு மேளா இருக்கட்டுமென சுரேஷ் கருதுவதாகத் தெரிகிறது.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒரு பதிவு செய்யப்படாத, அரசியல் கட்சியாக இருக்கின்ற போதிலும் விடுதலைப் புலிகள் இக்கட்சியை ஆரம்பத்தில் உருவாக்குவதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்ட காரணத்தால் புலிகளின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு இக் கட்சி தற்போது தேர்தல்களில் வெற்றி பெற்று வருகிறது.

தேர்தல் வந்துவிட்டால் புலிகளை மாவீரர்கள் எனவும், சிறந்த வீரர்கள் எனவும் புகழ்ந்து தள்ளும் இந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தேர்தல் முடிந்த பின்னர் புலிகளை அவ மதித்தும் மாவீரகளை கொச்சைப் படுத்தியும் தங்களது கருத்துகளை வெளியிடத் தவறுவதில்லை.

இதற்கு நல்ல உதாரணமாக சுமந்திரன் ஆரம்பத்தில் இருந்துவந்த போதிலும் தற்போது சுமந்திரனை சைற் எடுக்கும் அளவுக்கு முதல மைச்சர் விக்னேஸ்வரன் தற்போது தனது அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக முதலமைச்சர் ஊடகங்கள் தொடர் பில் கடுப்பில் இருந்து வருவதுடன் ஊடகங்கள் நினைத்த நேரத்தில் தம்மைச் சந்திக்கமுடியாது என்றும் ஊடகவியலாளர்கள் தனது அலுவலகத்திற்கு வந்து செய்தி சேகரிக்க முடியாது என்றும் நிபந்தனை விதித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கிலுள்ள ஊடகவியாலாளர்கள் மட்டுமன்றி

**2011ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் தீர்வுத்திட்டம் தொடர்பாக மக்களிடம் எந்தவொரு கருத்துக்களும் பரிமாறப்பட்டதாகப் பதிவில்லை. ஆனால் தமிழ் அரசியற்களமோ சாமானியர்களைக் கொண்டதல்லவே... தீர்வுத் திட்டத்திலோ அரசியற் சட்டத்திலோ என்ன இருக்கிறது என்பதை முழுமையாகத் தெரிந்துகொள்ளாமலே எதிர்விமர்சனங்களை வைத்து நிராகரித்துவிடக் கூடிய "சுத்த வீரமும்" "தமிழ்த்தேசிய ஆவேசமும்" கொண்ட விற்பன்னர்களால் நிரம்பியது அது. அந்தத் தீர்வுத்திட்டம் உருப்படியானதில்லை என்றும் சாத்தியமற்றது எனவும் பல்வேறு கோணங்களில் விமர்சனங்கள் எழுந்திருக்க வாய்ப்புண்டுதான்!**

தென்பகுதி ஊடகவியலாளர்களும் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். குறிப்பாக வடபகுதி மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தகவல் அறியும் உண்மையை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பறிக்க முயற் சித்து வருகின்றார். இது தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு செயற்பாடு. தமது இல்லத்தில் செய்திகளை சேகரிக்கக் கூடாது என்று முதலமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து வட மாகாண மக்களின் தகவல் அறியும் உரிமையை மறுக்கிறது, இது தவறானது என்று தென்னிலங்கை ஊடகங்கள் விசனம் வெளியிட்டிருக் கின்றன.

தேர்தல்களின் வெற்றிக்காக ஊடகங் களைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்ட முதலமைச்சர் தற்போது ஊடகங்களை புறக்கணிப்பது மக்களின் எண்ணங்களிற்கும் அவர்களின் உரிமை களுக்கும் மதிப்பளிக்க தவறுவதற்கு ஒப்பீடானது என அவை கூறியுள்ளன.

இவ்வாறு முதலமைச்சரின் நடவடிக்கை கள் ஒரு புறம் இருக்க தமிழ்மக்களின் கருத்துக்களை தாங்கள் பெரிதும் மதித்து நடப்பவர்கள் போன்று காட்டிக் கொள்ளும் கூட்டமைப்பு இதுவரை கட்சிப்பதிவு தொடர்பில் எந்தவொரு கவனமும் செலுத்தாமல் ஒளித்துப் பிடித்து விளையாடிவருகிறது.. தற்போது கூட்டமைப்பிற்குள் வெளிப்படையாக கருத்துக்கள் கூறிவரும் தமிழர் விடு தலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை கூட்டமைப் பிலிருந்து முற்றாக விலக்குவதற்குரிய துரித நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது.

இதன்பின்னணியில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவ ஞானம் சிறிதரனும், சரவணபவானும் வெளிப்படையாக களம் இறங்கி யுள்ளனர்.

அதாவது சங்கரியை என்ன பாடு பட்டாவது கூட்டமைப்பிலிருந்து தூக்கி வெளியில் எறிய வேண்டும் என்பதில் இவர்கள் இருவரும் கடுமையாக துள்ளிக் குதித்து வருகின்றனர். அதற்கு அவர்களுக்கு சொந்த காரணங்கள் உண்டு. இவ்வாறு சொந்த பதவிகளுக்கான போட்டியில் தமிழ் மக்களின் வாழ்க்கை அடகு வைக்கப்பட் டிருப்பதுதானே தமிழர் அரசி யலின் துரதிர்ஷ்டமாகத் தொடருகின்றது!

**சங்கரியை என்ன பாடுபட்டாவது கூட்டமைப்பிலிருந்து தூக்கி வெளியில் எறிய வேண்டும் என்பதில் இவர்கள் இருவரும் கடுமையாக துள்ளிக் குதித்து வருகின்றனர். அதற்கு அவர்களுக்கு சொந்த காரணங்கள் உண்டு. இவ்வாறு சொந்த பதவிகளுக்கான போட்டியில் தமிழ் மக்களின் வாழ்க்கை அடகு வைக்கப்பட்டிருப்பதுதானே தமிழர் அரசியலின் துரதிர்ஷ்டமாகத் தொடருகின்றது!**

ஆனால் பொதுத்தேர்தல் ஒன்று வருகின்ற பொழுது குறித்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும்

எப்படியாவது வெளியில் கழட்டி விடவேண்டும் என்பதில் கூட்டமைப்பின் மூத்த அரசியல் வாதிகள் தற்போது முனைப்புக்காட்டி வருவதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எது எப்படியோ கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொருவரு[illegible] காலத்திற்குக் காலம் ஒவ்வொரு [illegible]களைத் தாங்கி நாடகங்கள் ஆ[illegible]வது [illegible]ழமையான ஒன்றாக இருக்கின்ற[illegible] தற்போது புதிய நாடகம் ஒன்றை சுரே[illegible] பிரேமச்சந்திரன் ஆடத் தொடங்கியிருக்கின்றார். கூட்டமைப்புக்குள் நடக்கும் பதவிப் போட்டியில் தனக்கான காய்நகர்த் தலுக்கு இவர் புதிய புதிய ஆவேசங் களுடன் அவ்வப்போது வெளிவிடும் ஊடக அறிக்கைகளையே பெரிதும் நம்பியிருக்கிறார்.

அந்தவகையில், இனப்பிரச்சினை தொடர்பில் தென்னாபிரிக்க மத்தியஸ் தத்துடன் இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே பேச்சு இடம்பெறுவதற்கான சாத்தியம் உள்ளது என்றும் இச் சந்தர்ப்பத்தில் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளதாகவும், இந்தத் தீர்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து பொது மக்கள், பொது அமைப்புக்கள், புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் தத்தமது கருத்துக்களை கூட்டமைப்பினரிடம் சமர்ப்பிக்க முடியுமென்றும் அதிரடி வேண்டுகோள் விடுத்திருப்பதன் மூலம், தானும் தமிழ் மக்களுக்கான அரசியல் வேலைகளிலேயே முழுமூச்சாக இருந்துவருவதாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

தொடரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பல்வேறு முயற்சிகளை தான் முன்னெடுத்து வருவதாகவும் அவை காலத்திற்குக் காலம் இலங்கை அரசுத் தரப்பால் நிராகரிக்கப்பட்டும், தவறாக அர்த்தப்படுத்தப்பட்டும் பார்க்கப்பட்டதால் இழுபறியாகவே அவை முடிவடைந்தன என்றும் தற்போது தென்னாபிரிக்க அரசின் மத்தியஸ்தத்துடன் தமிழ்மக்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணக்கூடியதாக தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து முன்வைக்க நாம் திட்டமிட்டுள்ளோம் என்றும் சுரேஷ் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த ஜெனிவாத் திருவிழா வரும்போது அந்தக் கொண்டாட்டக் களேபரத்தில் இந்தத் தென்னாபிரிக்க நம்பிக்கைப் பேரொளியை மக்கள் மறந்துபோகச் செய்துவிடலாம். அது வரைக்கும் தாக்காட்ட இந்த ஈ-மெயில் தீர்வுத்திட்ட தயாரிப்பு மேளா இருக்கட்டு மென சுரேஷ் கருதுவதாகத் தெரிகிறது.

அத்துடன், கடந்த 2011 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் சமர்ப் பிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்தன. அவற்றைத் தவிர்க்கும் வகையில் நாம் இப்போது தயாரிக்கவுள்ள தீர்வுத் திட்டத்தில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக் களை உள்வாங்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அந்த 2011 தீர்வுத் திட்டத்தில் என்ன இருந்தது என்று தெரிந்தால்தானே அதற்கு அப்படி என்ன விமர்சனங்கள் வந்தன என்று மக்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட நம்பிக்கையில் சுரேஷ் தன்னுடைய "தீவிர மக்கள் சேவை அரசியற்பணியில்", முன்னேறுகிறார்!

2011ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தீர்வுத்திட்டம் தொடர்பாக மக்களிடம் எந்தவொரு கருத்துக்களும் பரிமாறப் பட்டதாகப் பதிவில்லை. ஆனால் தமிழ் அரசியற்களமோ சாமானியர்களைக் கொண்டதல்லவே... தீர்வுத் திட்டத்திலோ அரசியற் சட்டத்திலோ என்ன இருக் கிறது என்பதை முழுமையாகத் தெரிந்துகொள்ளாமலே எதிர்விமர் சனங்களை வைத்து நிராகரித்துவிடக் கூடிய "சுத்த வீரமும்" "தமிழ்த்தேசிய ஆவேசமும்" கொண்ட விற்பன்னர்களால் நிரம்பியது அது. அந்தத் தீர்வுத்திட்டம் உருப்படியானதில்லை என்றும் சாத்தியமற்றது எனவும் பல்வேறு கோணங்களில் விமர்சனங்கள் எழுந்திருக்க வாய்ப்புண்டுதான்!



இந்தச் சூழ்நிலையில் சுரேஷின் புதிய அறிவிப்பானது மக்கள் மீது பழிபோடுவதற்கான மாற்று ஏற்பாடாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது. மக்களினுடைய கருத்துகளுக்கு மதிப்புக் கொடுக் கும் கொள்கை கூட்டமைப்பிடம் இருக்குமானால், தீர்வுத் திட்டம் தொடர்பில் மக்களிடம் இரகசிய மான ஆலோசனைகளைக் கோராமல் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படையாக மக்களிடம் சென்று கருத்துக்களை கேட்டு பகிரங்கமான விவாதங்கள்ள நடாத்த முன்வரவேண்டும்.

இதற்கு அவர்கள் தயாராக இருக்கமாட்டார்கள். ஏனென்றால் இந்தியாவில் தமது பிள்ளைகளைப் பார்க்க ஒரு பகுதியினர் செல்வார்கள் ஏனையவர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்லவேண்டிய தேவை இருக்கின்றது.

எனவே அவ்வப்போது இடையிடையே ஊடக அறிக்கைகளை விட்டு வீர வசனத்தை பேசிவிட்டால் அரசியல் …லை அத்துடன் சரி என்பதே சுரேஸ் போன்றவர்களின் நிலைப்பாடாகும். மக்களின் கருத்திற்கும் மக்கள் மீதும் அக்கறை கூட்டமைப்பிற்கு இருந்திருந்தால் அவர்கள் அரசியல் தீர்வுக்குரிய காய்நகர்த்தல்களை எப்போதோ செய்து முடித்திருப்பார்கள். அவர்களது தேவை தீர்வு அல்ல; தேர்தல் வரை மக்களை உணர்ச்சி கரமாக வைத்திருக்கும் ஊடக அறிக்கைகள் மட்டுமே.

# பொதுபலசேனா போன்ற அமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கை தேவை

## வலியுறுத்துகிறது மனித உரிமை கண்காணிப்பகம்

பொதுபலசேனா போன்ற கடும் போக்குடைய தேசியவாத இயக்கங்களுக்கு எதிராக இலங்கை அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம். இது தொடர்பாக கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலயப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கெதிராக கடுமையான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. எனவே இந்த வன்முறைகள் குறித்து அரசாங்கம் பூரணவிசாரணை நடாத்தவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதுடன் நின்றுவிடாது, நாட்டின் சகல சிறுபான்மை மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் அனைத்து இன சமூகங்களினதும் பங்களிப்புடன் அரசாங்கம் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முனைப்புக்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் அரசாங்கம் உரிய முக்கியத்துவம் அளிப்பதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# தெரிவுக்குழு கால எல்லை மேலும் 6 மாதங்கள் நீடிப்பு

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கால எல்லை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஓரே நாட்டு மக்கள் என்ற ரீதியில் வாழ்வதற்கான அரசியல் சூழலை ஏற்படுத்துதல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்கும் விதந்துரைப்பதற்குமான குழு சபாநாயகரினால் கடந்த 2013ஆம் ஆண்டு யூன் 21ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவின் கால எல்லை இன்றுடன் முடிவடையவிருக்கும் நிலையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி வரை ஆறுமாத காலங்கள் நீடிப்பதற்கு நாடாளுமன்றம் நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியது.

இது தொடர்பான யோசனையை சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சமர்ப்பித்திருந்தார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் ஆளும் தரப்பில் 19 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் கால எல்லையை நீடிப்பதாக நாடாளுமன்றம் அறிவித்தது.

# விஜிததேரர் மீதான தாக்குதல் எவ்வித தொடர்பும் இல்லை

## என்கிறது பொதுபலசேனா

(கொழும்பு)

தேசிய பல் சேனா இயக்கத்தின் அழைப்பாளர் வட்டரக்கே விஜித தேரரின் தாக்குதல் சம்பவத்துடன் எந்தவித தொடர்பும் கிடையாது என பொதுபலசேனா இயக்கம் அறிவித்துள்ளது. பாணந்துறை பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் வட்டரக்கே விஜித தேரர், இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டிருந்தார். சம்பவத்தில் காயமடைந்த விஜித தேரர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தம்மையும் பொதுபலசேனா இயக்கத்தையும் தாக்குதல் சம்பவத்துடன தொடர்புபடுத்தும் சூழ்ச்சித் திட்டமொன்று கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளதாக பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். விஜித தேரர் பற்றிப் பேசுவதற்கே விரும்பவில்லை எனவும் தமக்கோ தமது அமைப்பிற்கோ இந்தத் தாக்குதல் சம்பவத்துடன எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமருக்கு பிழையான தகவலை சட்டம், ஒழுங்கு அமைச்சு வழங்கியதா?

## சந்தேகம் கொள்ளும் ரணில்



அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நிறுவப்பட்ட சட்டம், ஒழுங்கு அமைச்சு பிரதமர் டி.எம். ஜயரட்னவிற்கு பிழையான தகவல்களை வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அளுத்கம, பேருவளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்றில் பிரதமர் வெளியிட்ட கருத்துக்கள் பிழையானவை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றை பிழையாக வழிநடாத்த வேண்டுமென்ற எண்ணம் பிரதமருக்கு இருந்திருக்காது எனவும்; பிரதமருக்கு தகவல்களை வழங்கிய சட்டம், ஒழுங்கு அமைச்சின் அதிகாரிகளே இவ்வாறு பிழையான தகவல்களை வழங்கியிருப்பர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் எவரும் முறைப்பாடு செய்ய வில்லை அதனால் எவரையும் கைது செய்ய முடியாது என பிரதமர் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். எனினும், இந்தக் கருத்து பிழையானது எனவும், இந்தச் சம்பவம் தொடர்பில் சில முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை சட்டம், ஒழுங்கு அமைச்சு அதிகாரிகள் மூடிமறைத்து பிரதமருக்கு அறிக்கை வழங்கியுள்ளதாகவும் ரணில் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு பிழையான தகவல்களை வழங்கியதன் மூலம், அமைச்சின் அதிகாரிகள் பாரிய குற்றமிழைத்துள்ளதுடன் நாடாளுமன்றிற்கு பிழையான தகவல்களை வழங்குவதீ நாடாளுமன்றின் உன்னத தன்மையை உதாசீனம் செய்யும் வகையில் அமைந்துள்ளதாகவும் இது குறித்து சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மியன்மார் போல இலங்கையிலும் முற்றும் பௌத்தஅடிப்படைவாதம்

## சீ.என்.என். விமர்சனம்

மியன்மாரை போன்றே இலங்கையிலும் பௌத்த இனவாதம் முற்றி வருவதாக சர்வதேச ஊடகமான சீ.என்.என்.செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அளுத்கம முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் அதிகரித்து வருகிறது.

இதற்கு பொதுபலசேனா என்ற அமைப்பே காரணம் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன்.

இந்த அமைப்பு தொடர்ச்சியாக சிறுபான்மை முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடாத்துகிறது.

இந்த அமைப்புக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் ஆதரவு இருக்கிறது என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள முஸ்லிம்கள் தற்போது அநாதாரவான நிலையிலும், அச்சத்துடனும் வாழ்க்கை நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் சீ.என்.என். தெரிவித்துள்ளது.

# ஒத்துப்போகும் இரத்த மாதிரி

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட பிரித்தானியப் பிரஜையான குராம் ஷேய்க்கின் பெண் தோழியை துஷ்பிரயோகம் செய்த இடத்தில் இருந்து பெறப்பட்ட இரத்த மாதிரிகள் தங்காலை முன்னாள் பிரதேசசபைத் தலைவர் மற்றும் மேலும் இரு பிரதிவாதிகளின் இரத்த மாதிரிகளுடன் ஒத்துப்போவதாக, நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழக பேராசிரியரான நில்மினி குணரத்ன நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் ஆஜரான போதே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2011ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையன்று பிரித்தானிய பிரஜையான குராம் ஷேய்க் கொல்லப்பட்டதோடு அவரது பெண் தோழி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடும்போக்குவாத சக்திகள் குழப்பங்களை ஏற்படுத்தமுயற்சி

## அமைச்சர் கெஹலிய விசனம்



நாட்டில் குழப்பங்களை விளைவிக்க சில கடும்போக்குவாத சக்திகள் முயற்சித்து வருவதாக ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அளுத்கம, பேருவளை சம்பவங்களை அடிப்படையாக் கொண்டு நாட்டில் குழப்பம் விளைவிக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

இதற்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இடமளிக்கக் கூடாது. பள்ளிவாசலுக்கு செல்லும் முஸ்லிம் மக்களை குழப்பும் வகையில் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

முஸ்லிம் மக்கள் அமைதியான முறையில் மதவழிபாடுகளில் ஈடுபட வேண்டும்.

சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ஏற்கனவே உறுதியளித்துள்ளார்.

கடும்போக்குவாதிகள் மக்களை பிழையாக வழிநடாத்தி வன்முறைகளைத் தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான முயற்சிகளுக்கு மக்கள் இடமளிக்கக் கூடாது என சகல இன சமூகங்களிடமும் கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் அனுமதியின்றி ஈரானிடம் எண்ணெய் கொள்வனவு?

அமெரிக்காவிடம் அனுமதி பெறாமல், அரசாங்கம் மூன்றாவது தரப்பின் ஊடாக, ஈரானிய மசகு எண்ணெயை இறக்குமதி செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்காவினால் அனுமதிக்கப்பட்ட அளவை விட, கூடுதலான மசகு எண்ணெயை மூன்றாந் தரப்பின் மூலம் ஈரானிடம் இருந்து வாங்கியுள்ளதை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதிப்படுத்தியுள்ளார்.

மலேசிய நிறுவனம் ஒன்றின் மூலமே ஈரானிய மசகு எண்ணெயை வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் சீனாவிடம் இருந்து கப்பல்களை கொள்வனவு செய்யவுள்ளது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, எண்ணெய் இறக்குமதி மற்றும் நிலக்கரி இறக்குமதிக்கு, கப்பல்கள் தேவைப்படுவதாகவும், அதன் மூலம் செலவுகளைக் குறைக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்போதே, மூன்றாந் தரப்பின் மூலம் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு ஆலை ஈரானிய மசகு எண்ணெய் சுத்திகரிப்புக்கென்றே உருவாக்கப்பட்டது என்றும் இதனால் மூன்றாவது தரப்பின் மூலம் வாங்குவதை விட வேறு வழியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## அரசாங்கம் மறுப்பு

அமெரிக்காவின் பொருளாதார தடையை தவிர்ப்பதற்காக இலங்கை ஈரானிடமிருந்து மூன்றாம் தரப்பினூடாக கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது என அரசாங்க பேச்சாளரும் தகவல் ஊடகம் மற்றும் தொடர்பாடல் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார் என ரொய்டர்ஸ் செய்தி ஸ்தாபனம் பிரசுரித்துள்ள செய்தியை இலங்கை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

இந்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் இது முற்றிலும் தவறான செய்தியென்றும் வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொண்டைமானாறு 2014 பரீட்சைக்காக 2015 மாணவர்களுக்கு இருநாள் ஓய்வு

## பெற்றோர் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் க.பொ.த.உயர்தர (2014) மாணவர்களுக்கான தொண்டைமானாறு பரீட்சையை காரணம் காட்டி 2015 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தர மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு இரு நாள் ஓய்வு வழங்கப்பட்டுள்ளதால் இம் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர் கவலைவெளியிட்டுள்ளனர். நேற்று முன்தினமும் நேற்றும் இம் மாணவர்களின் பொது அறிவு சார்ந்த பரீட்சை இடம் பெற்றதால் இருந்து கற்பதற்கு கதிரை, மேசை இல்லை எனக் கூறி 2015 வருட மாணவர்களின் கல்விக்கு ஓய்வுகொடுக்கப்பட்டது.

யுத்தகாலத்தில் எமது மாணவர்கள் மரநிழலிலும் மணலிலும் இருந்து தான் கற்றார்கள், அவ்வாறு கற்ற மாணவர்கள் சிறந்த பெறுபேற்றையும் பெற்று சாதனை படைத்திருக்கிறார்கள். ஆனால் பரீட்சை என்ற நொண்டிச் சாட்டுக்கூறி மணவர்களின் கல்விச் செயற்பாடுகளை நிறுத்தியது நியாயம் தானா? என பெற்றோர்கள் பலரும் கேள்வி எழுப்பியுள்ளதுடன் கவலையும் வெளியிட்டுள்ளனர். (17)

# கைது செய்யப்பட்ட 24 மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

நெடுந்தீவு கடற்பரப்பிற்கு அண்மித்த பகுதியில் கைது செய்யப்பட்ட 24 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் யூலை மாதம் 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி செ.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 6 படகுகளும் 24 மீனவர்களையும் காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்து யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

மேற்படி 24 மீனவர்களையும் யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் யூலை 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (25)

## முரசின் இன்றைய பலன்



(21.06.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் ஆனி மாதம் 07 ஆம் திகதி.
நவமி / மரணயோகம்.
ரேவதி நட்சத்திரம் பி.ஜ. 01.35 வரை. பின் அஸ்வினி.
இராகு காலம் 08.54 - 10.24 வரை. சுபஹோர 02.54 - 04.24 வரை.

ஜோதிட வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தேகத்தில் பலம் இருந்தாலும் மனதில் இனம்புரியாத சலனங்களால் பலவீனப்படும் சூழ்நிலை உண்டாதல், தனியார் துறையில் வேலைவாய்ப்புக்கிடைத்தல். |
| ரிஷபம் | தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் கவிநிலைகெட்டுப் போதல், பிறருடன் உரையாடும் போது கடும் வார்த்தைப் பிரயோகங்களைத் தவிருங்கள். |
| மிதுனம் | பூர்வீகச் சொத்துப்பிரச்சினை கலந்துரையாடல் மூலம் சாதகமான முடிவினைக்கொண்டுவருதல், வீண் செலவுகளால் செய்வதறியாது திகைத்தல். |
| கடகம் | பிதா பிள்ளையின் உறவுபாதிக்கப்பட்டிருந்தாலும் பிரிவினை முயற்சி அற்றுப்போய்விடும், இடமாற்றம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்ட கடிதம் கண்டு ஆனந்த மடைதல். |
| சிம்மம் | தெய்வப்பணியுடன் தர்மப்பணியும் மேலோங்கி காணப்படுவதினால் போற்றுதல் கிட்டல். சுயதொழிலால் இலாபம் பெறல். |
| கன்னி | நண்பர்கள் உறவினர்களின் ஆதரவும் உதவியும் மனதிற்கு ஆறுதல் அளிக்கும், பிரச்சினைகளைத் தீர்த்தல் நம்பிக்கை மேலோங்குதல். |
| துலாம் | கணவன் மனைவி உறவில் சற்று விழிப்புடன் இருப்பின் துயர்விலகும், பெற்றோரின் புத்திமதியைச் செவிமடுத்ததால் வரவிருந்த துயர் விலகிப்போதல். |
| விருச்சிகம் | தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த எதிரி மனம் மாறி உறவுக்கு கைகொடுத்தல், சகோதரர் பொறுத்த கட்டத்தில் உதவி செய்து கை தூக்கிவிடல். |
| தனுசு | புதியமனை அமைக்க முற்படல், சட்டவிரோத மின்சாரம் பெறமுயற் சித்தமை கண்டு பிடிக்கப்பட்டு தன[illegible]னை பெறல். |
| மகரம் | அரசியல் பற்றி விமர்ச்சிப்பதால் நீண்டநாள் நண்பனும் விரோதியாகிவிடுதல், கட்டாக்காலி கால்நடைகளால் கவலை கொள்ளல். |
| கும்பம் | பெரியவர்களுக்கு உரிய மரியாதையை வழங்குதல், வேலைப்பளுவால் பல ஓடர்களை நிறைவேற்ற முடியாது போய விடல். |
| மீனம் | வேண்டப்படாத நபரின் தொடர்பினைத்துண்டித்ததால் மனதில் நிம்மதி பிறத்தல், கிடைக்கமாட்டாது என நம்பப்பட்ட பொருள் கிடைத்தல். |

# முகமாலை கிராமத்தில் 67 குடும்பங்களுக்கு வீடுகள்

(பளை)

முகமாலை கிராமத்தில் இதுவரை சுமார் 105 குடும்பம் வரை மீள்குடியேறி உள்ளார்கள். இதில் (S.D.C) சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் ஊடாக முதற் கட்டமாக 67 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிற்கான நிரந்தர வீடு வழங்கலுக்கான ஒப்பந்தமொன்று பயனாளிகளுடன் நேற்று முன்தினம் செய்யப்பட்டது.

இம்மாதம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பமாகும் என்பதுடன் வீட்டுத்திட்டம் தொடர்பான விளக்கங்களும் அந்த நிறுவன திட்ட முகாமையாளர் மற்றும் பொறியியலாளர்களால் மக்களுக்கு மிகவும் தெளிவாக வழங்கப்பட்டது. (37)

# சிங்கள மொழிபயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி மட்டம் 1 பயிற்சி வகுப்பினை முதற்தடவையாக கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்துள்ளது.

இப்பயிற்சி வார இறுதி நாட்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பித்தோர் பங்குபற்ற முடியும் என வடமாகாண முகாமைத்துவ் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி என். பரமநாதன் அறிவித்துள்ளார்.

# ஒரு மாணவனின் தொலைந்துபோன இலட்சியம்...

## (உண்மைச்சம்பவம்)




ஒவ்வொரு மாணவர்களுக்கும் தங்களுடைய பாடசாலைக் காலங்களில் கல்வி கற்கும் போது இலட்சியங்களினுடனேயே கல்வி கற்கின்றார்கள். அதாவது தாம் எதிர்காலத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவராக வரவேண்டும் எனறே கனவு காண்கின்றார்கள். ஆனால் சிலரது இலட்சியங்கள் ஏதோ ஒரு காரணத்தினால் அடையமுடியாமல் போகின்றது. இக்காரணங்களானவை அக் குறித்த மாணவன் சார்ந்ததாகவோ அல்லது அம்மாணவனின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகவோ அமைந்துவிடுகின்றன. இவ்வாறு ஓர் இலட்சியத்துடன் கல்வி கற்ற ஓர் மாணவனின் உண்மைக்கதையை சற்று அறியுங்கள்.

அம் மாணவன் சமூக பொருளாதார மட்டத்தில் கீழ் நிலையில் உள்ள ஓர் குடும்பத்தில் பிறந்தவன் அவன் குடும்பத்தின் ஒரே பிள்ளை. அப்பவோ நாளாந்த உழைப்பினை நாடிச் செல்பவர். அவன் தனது பாடசாலைக் காலத்தில் மிகவும் கெட்டிக்காரனாக அனைவரும் போற்றும் வண்ணம் கல்வியைக் கற்று வந்தவன். இதனால் அவன் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) பரீட்சையில் என ஓர் உயரிய பெறுபேற்றினைப் பெற்றவன். அவ்வேளையில் அவனது இலட்சியம் நான் ஓர் பொறியியலாளனாக வரவேண்டும் என்றதாகவே இருந்தது.

இன்று எமது இளம் சமுதாயத்தை அச்சுறுத்துவதில் முக்கிய இடத்தினைப்பெறுவது சிகரட், மதுபானம், போதைவஸ்து என்பவையே ஆகும். இவை உயர்தரக் கல்வியை நோக்கி பயணிக்கத் தொடங்கிய இக் கெட்டிக்கார மாணவனையும் விட்டுவிடவில்லை. பிறழ்வான நண்பர்களின் சேர்க்கையால் சிகரட், மதுபானம், போதைவஸ்து என்பனவற்றின் பழக்கங்களினுள் அகப்பட்டுக் கொண்டான். ஆரம்பத்தில் சிறு சிறு குழுக்களுடன் சேரத் தொங்கியவன் நாளடைவில் வீட்டுக்கு வருவதையே தாமதப்படுத்திக் கொண்டான். பின்பு வீட்டாருக்குச் சொல்லாம லேயே வெளியிடங்களுக்கும் செல்லத்தொடங்கினான். நாட்கள் செல்லச் செல்ல குழுச் சண்டைகளிலும் பங்குபற்றத் தொடங்கினான். இதன் காரணமாக உயர்தரக் கல்வியைக்கூட சிந்திக்காமல் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தினான். பெற்றோரால் எதுவும் செய்ய இயலவில்லை. இப்படியாக காலங்கள் ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் இம் மாணவனின் நிலையைக்கண்டு இவனை நல்வழிக்குக் கொண்டுசெல்ல இவனுக்குக் கல்விகற்பித்த ஓர் ஆசிரியர் முனைந்தார். அவ் ஆசிரியர் அப்பகுதி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவர் மூலமாக அம் மாணவனை சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையுடன் இணைந்து இயங்கும் குருந்தம் எனும் மதுவுக்கு அடிமையானோர் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தார். அங்கு பாதிக்கப்பட்ட அம்மாணவனுக்கு போதிய சிகிச்சைகள், ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டன. இதன் காரணமாக நாளொன்றிற்கு 35 சிகரட்டுக்கள் பாவித்தவன் இன்று அதை தொடாத ஓர் நிலைக்கு திரும்பிவிட்டான்.

இன்று அம் மாணவன் திருந்திவிட்டாலும் அவனால் தனது உயர்தரக் கல்வியைத் தொடரமுடியவில்லை. இது தொடர்பாக இன்றைய எமது மாணவாகள், இளைய தலைமுறையினர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும்.

எனவே எமது பிள்ளைகளை, எமது மாணவர்களை அவர்களது இலட்சியப் பயணங்களை நோக்கிச் செல்வதற்கு இன்றைய காலத்தில் தடையாகவுள்ள சிகரட், மதுபானம், போதைவஸ்து என்பவற்றிற்கு எதிராக அனைவரும் போராட வேண்டும். இது காலத்தின் கட்டாயமும் ஆகும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நிறுத்தப்படும் துவிச்சக்கரவண்டிகள்

அச்சுவேலி பேருந்துத்தரிப்பிடம் மற்றும் சந்தைப்பகுதிகளை அண்டிய பகுதிகளில் உள்ள வர்த்தகநிலையங்களுக்கு முன்பாக துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பன தரித்து விடப்படுகின்றன.

பிரதேசசபையால் இவ்விடத்தில் துவிச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள் என்பவற்றை நிறுத்தவேண்டாம் என விளம்பரப் பலகை மூலம் தெரியப்படுத்தியுள்ள நிலையில் அவ்விடத்தில் மீண்டும் அவை தரித்து விடப்படுவதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்யுள்ளதாக வர்த்தகநிலைய உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் இதனால் இடநெருக்கடி மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இச் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துமாறு கடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# மகா கும்பாபிஷேகம்


வடமராட்சி தென்புலோலி அருள்மிகு மூச்சன் புலோ சிவன் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெ[illegible]ரிக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானிக இளையகுரு.பிரம்ம ஸ்ரீ சுதர்சன் கணபதீஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாக இருந்து மகாகும்பாபிஷேகத்தை நடாத்துவார். ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதம குருக்களான பிரம்மஸ்ரீ கணபதிசாமி சுதர்சனக்குருக்கள் பிரம்மஸ்ரீ கணபதிசாமி புருஷோத்தமக் குருக்கள் ஆகியோர் அருளாசிகளை வழங்குவார்கள். 3 ஆம் திகதி வியாழக்கிழமை பக்த அடியார்களின் எண்ணெய்க்காப்பு இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். (01)

## அலங்கார உற்சவம்

வடவரணி சூழாநின்ற புல முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. இதில் பதினொராம நாள் பூங்காவன திருவிழா இடம்பெறும். உற்சவ காலத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமென ஆலய நிர்வாகத் தலைவர் தெரிவித்துள்ளார். (105)

# உலகக் கிண்ண கால்பந்தாட்டத் திருவிழா



## இங்கிலாந்தும் வெளியேற்றம்

(சாவ் பாலோ)

இங்கிலாந்து அணிக்கு எதிரான உலக கோப்பை கால்பந்து தொடரின் லீக் போட்டியில் உருகுவே அணி வெற்றி பெற்றது.

20ஆவது உலக கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. சாவ் பாலோவில் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு நடைபெற்ற டி பிரிவு லீக் போட்டியில் உலக தரவரிசையில் 7ஆவது இடத்தில் உள்ள உருகுவே அணி, 10ஆவது இடத்தில் உள்ள இங்கிலாந்தை சந்தித்தது. இங்கிலாந்து அணி, தனது முதல் போட்டியில் இத்தாலியிடம் வீழ்ந்தது. இதேபோல கோஸ்டரிகாவுக்கு எதிரான போட்டியில் உருகுவே அணி உதை வாங்கியது. இதனையடுத்து இரு அணிகளும் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள கட்டாய வெற்றி பெற வேண்டிய நிலையில் களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற முதல்பாதியில் இருந்து உருகுவே அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். போட்டியின் 39ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் லூயிஸ் சுவாரஸ் முதல் கோல் அடித்தார். இதற்கு முதல் பாதியில் இங்கிலாந்து அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியின் ஆரம்பம் முதல் இங்கிலாந்து வீரர்கள் கோல் அடிக்க கடும் போராட்டத்தை வெளிப்படுத்தினர். இதற்கு பலனாக இங்கிலாந்தின் ரூனே போட்டியின் 75ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து போட்டியை சமன் செய்தார். இம்மகிழ்ச்சியை கொண்டாடி முடிப்பதற்குள் உருகுவே வீரர் லூயிஸ் சுவாரஸ் (85ஆவது நிமிடத்தில்) இரண்டாவது அடி கொடுத்தார். இதற்குக் கடைசிவரை போராடிய இங்கிலாந்து வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இறுதியில் இங்கிலாந்து அணி, உருகுவே அணியிடம் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

## எழுச்சி கண்ட கிரீஸ்; ஆட்டம் சமநிலை



(நடால்)

ஜப்பான், கிரீஸ் அணிகள் மோதிய உலக கோப்பை கால்பந்து தொடரின் லீக் போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சி பிரிவு லீக் போட்டியில் ஜப்பான், கிரீஸ் அணிகள் மோதின. ஆரம்பம் முதல் இரு அணி வீரர்களும் இத்தொடரில் முதல் வெற்றியை பெற கடும் போராட்டத்தை வெளிப்படுத்தினர். போட்டியின் 29ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீரர் ஹோண்டாவுக்கு கிடைத்த பிரி கிக் வாய்ப்பை வீணடித்தார். தொடர்ந்து போட்டியின் 37ஆவது நிமிடத்தில் ஏற்கனவே இரண்டு முறை மஞ்சள் அட்டை மூலம் எச்சரிக்கப்பட்ட கிரிஸ் அணி கப்டன் கட்சோர்ஏனியஸ் இம்முறை சிவப்பு அட்டை மூலம் வெளியேற்றப்பட்டார். இதையடுத்து முதல் பாதியின் முடிவில், கோல் எதுமின்றி போட்டி சமநிலை வகித்தது.

பின்இரண்டாவது பாதியில் 10 வீரர்களுடன் போட்டியை தொடர்ந்த கிரிஸ் அணி வீரர்கள் எழுச்சி பெற்றனர். முதல் பாதியைப்போல இல்லாமல் சுதந்திரமாக செயற்பட்ட கிரிஸ் அணி வீரர்கள் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அந்த அணியின் ஜார்ஜியஸ் சமர்ஸ், பெர்னாண்டோ சான்டோஸ், ஜிகாஸ் ஆகியோரின் ஆட்டம் ஜப்பான் வீரர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. ஆனால் இதை ஜப்பான் கோல் காப்பாளர் சிறப்பாக சமாளிக்க, இரண்டாவது பாதியும் கோல் ஏதுவும் இல்லாமல் முடிந்தது. முடிவில், போட்டி 0-0 என சமநிலையானது. இதையடுத்து இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளி அளிக்கப்பட்ட்து.

## காஸ்பந்துத் துளிகள்...

உலக சம்பியனை சிலி வெளியேற்றியது பெருமை அளிக்கிறது. சிறந்த எதிரிக்கு எதிரான மகத்தான வெற்றி இது. இதுதான் எங்கள் சிறந்த வெற்றியா எனத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் அடுத்த ஆட்டம்தான் சிறந்த வெற்றி. இருந்தாலும், இந்த வெற்றியை எளிதில் மறக்க முடியாது.

**ஜோர்ஜ் சம்போலி (சிலி பயிற்சியாளர்)**

வெற்றிக்காக போராடும் இளம் வீரர்கள் நிறைந்தது எங்கள் அணி. இந்தப் போட்டியில் இன்னும் நாங்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டி உள்ளது. இந்த உலகக் கோப்பையில் ஆச்சரியம் அளிக்கும் அணியாக சிலி இருக்கும்.

**ஆர்டுரோ விடல், (சிலி நடுகள வீரர்)**

கடினமான தருணங்களில் இணைந்து செயற்பட வேண்டும். இன்று எங்களுக்கான நாள் அல்ல. ஆனால் எங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது. எங்கள் பயிற்சியாளர் வின்செண்ட் டெல் பாஸ்க்கை முழுமையாக மதிக்கிறோம். அவர் என்ன முடிவெடுத்தாலும் நாங்கள் அவருடன் இருப்போம்.

**செர்ஜியா ரமோஸ் (ஸ்பெயின் பின்கள வீரர்)**

உலக கோப்பைக் கால்பந்து போட்டியிலோ அல்லது முக்கியமான போட்டிகளிலோ இது போன்ற எதிர்மறையான முடிவுகள் கிடைக்கும் போது, அடுத்து அதற்குரிய விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும். பொதுவாக இது நடப்பது வழக்கமானது தான். ஆனால் எனது எதிர்காலம் குறித்து இப்போது சிந்திக்க விரும்பவில்லை. அது பற்றியும் அணி குறித்தும் அலசி ஆராய நேரம் தேவை. அதற்கு இது சரியான நேரம் அல்ல. ஸ்பெயின் கால்பந்து அணியின் வளமான எதிர்காலத்திற்கு என்ன தேவை மற்றும் எனது நிலை குறித்து விரைவில் ஆலோசித்து முடிவு செய்வோம்.

**வின்செனட் டெல் போஸ்கயூ (ஸ்பெயின் வீரர்)**

இது எங்களுக்கு மோசமான நாள். வெற்றி பெற முடியாததற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். இருப்பினும் தோல்வி குறித்து இப்போதே ஆய்வு செய்யத் தேவையில்லை. சிலி, நெதர்லாந்து ஆகிய இரு அணிகளும் எங்களுக்கு எதிராக கோல்களை அடித்து எங்களுக்கு மலையளவு இலக்கு நிர்ணயித்துவிட்டன. முதல் பாதியில் த்ன்னம்பிக்கையின்றி செயற்பட்டு, இரண்டாவது பாதியில் எழுச்சி பெறுவது கடினம்.

**வின்சென்ட் டெல் போஸ்கே, (ஸ்பெயின் பயிற்சியாளர்)**

## கால்பந்துத் துளிகள்...

* விலகல் சுற்றுக்கு முன்னேறத் தவறிய 5ஆவது நடப்பு சம்பியன் என்ற மோசமான சாதனை ஸ்பெயின் அணிக்கு சொந்தமாகி உள்ளது.

* 1962இல் பிரேசில் அணி தொடர்ந்து 2ஆவது முறையாக வென்று கோப்பையை தக்கவைத்தது. அதன் பின்னர் நடைபெற்ற உலக கோப்பை போட்டிகளில் வேறு எந்தச் சம்பியன் அணியும் கோப்பையை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. ஸ்பெயின் அணியும் இந்த சாபத்துக்கு ஆளாகிவிட்டது

* உலக கோப்பையில் தொடர்ந்து 5ஆவது முறையாக கமரூன் அணி விலகல் சுற்றுக்கு முன்னேற முடியாமல் பரிதாபமாக வெளியேறி உள்ளது.

* போர்த்துக்கல் வீரர் பெபே, உருகுவே வீரர் மெக்சிமிலானோ பெரேரா இருவருக்கும் ஒரு ஆட்டத்தில் விளையாட மட்டுமே தடை விதிக்கப்பட்டதாகவும், கடைசியில் லீக் ஆட்டத்தில் இந்த வீரர்கள் விளையாடலாம் என்றும் பிபா அறிவித்துள்ளது. ஜேர்மனிக்கு எதிரான ஆட்டத்தில் பெபேவுக்கும், கோஸ்டா ரிகா ஆட்டத்தில் பெரேராவுக்கும் சிவப்பு அட்டை காண்பிக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெயினை காலைவாரிய டிக்கி டாக்கா

தற்போது சிலி அணியிடமும் தோல்வியடைந்த பின் டிக்கி டாக்கா முற்றிலும் செயலிழந்து விட்டதாக விமர்சனம் எழுந்துள்ளது. இது உண்மைதானா, டிக்கி டாக்கா குறித்த சிறு பார்வை. மேலாளராக ஜோஹன் கிரயுப் இருந்த காலத்தில் இருந்து தற்போது வரையிலும் டிக்கி டாக்கா யுத்தியை ஸ்பெயின் அணி பின்பற்றி வருகிறது. ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் இந்த யுத்தியை வைத்துதான் ஸ்பெயின் அணி 2008,2012-இல் யூரோ கோப்பை, 2010இல் உலகக் கோப்பை வென்றது.

ஸ்பெயின் அணியைப் போ்ல பார்சிலோனா கிளப் அணியும் இந்த யுத்தியின்படி செயற்பட்டது. ஆனால், ஜோஸ் மொரினோ ரியல் மட்ரிட் பயிற்சியாளராக இருந்தபோது பார்சிலோனாவின் டிக்கி டாக்கா யுத்தியை உடைத்தெறிந்தார். தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபடும் அட்லெடிகோ மட்ரிட்டும், பேயர்ன் முனிச் அணியும் கூட இந்த யுத்தியைத் தகர்த்தெறிந்தது. மெல்ல மெல்ல டிக்கி டாக்கா யுத்தி எடுபடாமல் போவதை ஸ்பெயின் பயிற்சியாளர் கவனிக்கவில்லை. நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டம் முடிந்த பின்பே சுதாரித்திருக்க வேண்டும், தொடர்ந்த ஆட்ட முறையில் மாற்றம் ஏற்படுத்தாததே ஸ்பெயினின் தோல்விக்கு காரணம் என்கின்றனர் கால்பந்து நிபுணர்கள்.

## போற்றிய ஊடகங்கள் தூற்றுகின்றன

உலக சம்பியன் ஸ்பெயின் எதிர்ப்பின்றி பணிந்ததை அந்நாட்டு பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்துள்ளன. என்றாவது ஒருநாள் தோல்வி வரும் எனத் தெரியும், ஆனால், இந்த வகையில் மோசமாக தோல்வியடைவோம் என எதிர்பார்க்கவில்லை என்று பத்திரிகைகள் விமர்சித்துள்ளன.

மகத்தான சகாப்தத்தின் மோசமான முடிவு என அதிகளவில் வாசகர்களைக் கொண்டுள்ள மர்கா பத்திரிகை முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. திறமையான தலைமுறை முடிவுக்கு வந்து, புதிய தலைமுறை உருவாகும் நேரம் இது என அந்தப் பத்திரிகையின் கட்டுரையாளர் சான்டியாகோ செகுராலா குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு பத்திரிகை உலகம் தோற்று விட்டது என தலைப்பிட்டிருந்தது. அதேபோல மற்ற பத்திரிகைகளும் ஸ்பெயின் கோல் காப்பாளரும், கப்டனுமான கேசிலாஸ் மற்றும் பயிற்சியாளரை விமர்சித்துள்ளன.

நெதர்லாந்துக்கு எதிராக 5-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தபோதே ஸ்பெயின் அணியின் பிரத்யேக டிக்கி டாக்கா (குறுகிய இடைவெளியில் பாஸ் செய்து, பந்தை அதிக நேரம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது) யுத்தி முடிவுக்கு வந்து விட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், இந்த யுந்தியில் நாங்கள் பல வெற்றிகளைக் குவித்துள்ளோம். அப்படி இருக்கையில் ஒரு ஆட்டத்தில் தோல்வியடைந்ததற்காக ஆட்ட யுத்தியை மாற்ற மாட்டோம் என ஸ்பெயின் நடுகள வீரர் டேவிட் சில்வா தெரிவித்திருந்தார்.

## இன்றைய ஆட்டம்

**ஆர்ஜென்ரீனா எதிர் ஈரான்**
**இலங்கை இரவு 9.30**

**ஜேர்மனி எதிர் கானா**
**இலங்கை நள்ளிரவு 12.30**

**நைஜீரியா எதிர் போஸ்னியா**
**இலங்கை அதிகாலை 3.30**

# வடக்கு மாகாண கரம்; அசத்திய அணிகள்



சென். ஜோண்ஸ் கல்லூரி



சென். பற்றிக்ஸ் கல்லூரி



கொக்குவில் இந்துக் கல்லூரி



சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக் கிடையிலான கரம் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி,சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப் பற்றிக் கொண்டன.

வடமாகாண கல்வித் திணைக்களத் தின் விளையாட்டுப் பிரிவு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கரம் போட்டி கடந்த 16,17ஆம் திகதி களில் யாழ். மத்திய கல்லூரி உள் ளக விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் வவுனியா தமிழ் மத் திய மகாவித்தியாலய அணியும்மோதின. இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி 25-15,25-10 என்ற நேர் சுற்றில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண் டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் மன்னார் பெரியமடு மகாவித்தியாலய அணியும் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அணியும் மோதின. இதில் முதல் செட்டை பெரியமடு மகாவித்தி யாலய அணி 25-20 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றியது. இரண்டாவது செட்டை 25-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அணி கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது. தீர்க்கமான மூன்றாவது சுற்றில் சிறப்பாக ஆடிய பெரியமடு மகாவித்தியாலய அணி 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. இறுதியில் பெரியமடு மகாவித்தியாலய அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் வவுனியா தமிழ் மத் திய மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 25-20, 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் முல் லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 25-17, 25-12 என்ற புள்ளி கள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் இந் துக் கல்லூரி அணியும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே அசத்தலாக விளை யாடி கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 25-16, 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டி யில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 25-18, 25.17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடை யிலான இறுதிப் போட்டியில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணியும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி 25-19, 25-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் வட மராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி யும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி 25-14, 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித் துக் கொண்டது. (12,93)

## இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணை யுடன் நடைபெற்று வரும் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் மூன்றாவது மற்றும் நான்காவது காலிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முதலாவது போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணியும், யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ள அதேவேளை, தொடர்ந்து நடைபெற வுள்ள போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியும் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற காலிறுதிப் போட்டிகளில் யாழ். பற்றீசியன்ஸ் மற்றும் தெல்லிப்பளை யூனியன் அணிகள் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள் ளன. அரையிறுதிப் போட்டி நாளை நடைபெற வுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள் ளனர். (48)

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் கொழும்பு மகரகம மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடை பெறவுள்ள இப்போட்டியில் யாழ். மாவட்ட அணி களும் பங்கேற்கவுள்ளது. பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும் ஆண்கள் பிரி வில் கரவெட்டி நவஜீவன்ஸ் அணியும் இப்போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ளன.

இதேவேளை, கபடிப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் இன்றும் நாளையும் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## முல்லரின் ஆனந்த தாண்டவம்



தோமஸ் முல்லருக்கு வாழ்த் தும், பாராட்டும் தெரிவிக்கும் வகை யில் ஜேர்மனி மட்டுமின்றி உல கின் பல நாடுகளில் கால்பந்து இரசிகர்கள் தங்கள் கருத்துக்களை சமூக வலைத்தளங்கள் மூலம் தெரி வித்துள்ளனர். இந்நிலையில் ஜேர் மனி வெற்றியை தொடர்ந்து டுவிட் ரில் தோமஸ் முல்லரை சிவபெரு மானுடன் ஒப்பிட்டு ஒரு படம் வெளியாகியுள்ளது. சிவபெருமான் ஆனந்த நடனம் ஆடும் காட்சியை சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் காணமுடியும். சிவபெருமானின் ஆனந்த நடன காட்சியை மாற்றி தோமஸ் முல்லர் கால்பந்து விளை யாட்டில் நர்த்தனம் புரிவது போன்ற படம் டுவிட்டரில் வெளியிடப் பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கன மழையால் கைவிடப்பட்ட ஆட்டம்

(மிர்பூர்)

இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி கன மழை காரணமாக கைவிடப்பட்டது.

இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டி களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் பங்களாதேஷின் மிர்பூரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சி யில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இந்திய அணி 34.2 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றவேளை மழை காரணமாக போட்டி தடைப்பட்டது. தொடர்ந்தும் பெய்த கனமழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது. இதன் காரணமாக ஏற்கனவே இரு போட்டிகளில் வெற்றிபெற்ற இந்திய அணி 2-0 என்ற கணக்கில் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.

விளையாட்டுச் செய்திகள்

## வெற்றிக்கான வாய்ப்பு பிரகாசம்

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டா வது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிக்கான வாய்ப்பை பிர காசப்படுத்தியுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் மேற்கிந்தியத் தீவுகளின் ஸபோட் ஒவ் ஸ்பெயினில் நடை பெற்று வருகின்றது. 239 ஓட்டங்கள் பின் னிலையில் இரண்டாவது இனிங்ஸிற் காக ஆடிவரும் நியூசிலாந்து அணி இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் வில்லியம்ஸன் 52, வைட்லிங் 38, லதம், ரெய்லர் ஆகியோர் தலா 36 ஓட்டங் களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் ரோச் மூன்று, ஜெரோம் ரெய்லர், பென் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இரண்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் நியூசிலாந்து அணி 18 ஓட்டங்களால் முன்னிலை பெற் றுள்ளது. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 221. மேதீவுகள் முதல் இனிங்ஸ் 460.

# இலங்கையின் மாகாணசபைகளை மக்களுக்குப் பயனுடையவைகளாக ஆக்குவதற்கு ஏதாவது வழியுண்டா!

- வரதராஜப்பெருமாள்

இங்கு முதலில் எமக்கு பிரதானமானது 13ஆவது திருத்தமே. எனவே முதலாவதாக, மாகாண சபைகள் தொடர்பான அரசியல் யாப்பு விதிகளை பருமட்டாக நோக்குவோம்:-

**1.** இலங்கையின் பாராளுமன்றமாக இருந்தாலென்ன அல்லது மாகாண சபைகளாக இருந்தாலென்ன அவை உருவாக்கும்

> **மாகாண அரசாங்கத்துக்கான அதிகாரங்கள் இவ்வாறு ஆக்கப்படும் சட்டங்களின் ஊடாக கிடைக்கிறதே தவிர, ஜனாதிபதி தருவதோ அல்லது ஆளுநர் தருவதோ அல்ல. சட்ட மேதையான முதலமைச்சர் சட்டங்களை சட்டபூர்வமாக அணுகுவதை விட்டுவிட்டு "ஜனாதிபதி சட்டப்படி நடக்கவில்லை", "ஜனாதிபதி சொன்னபடி நடக்கவில்லை", "ஆளுநர் விடுகிறார் இல்லை", "ஆளுநர் சொல்லுக் கேட்கிறார் இல்லை" என்று சின்னப்பிள்ளைகள் அழுவது போல கருத்துக் கூறுவது சரிதானா?**

சட்டங்கள் இந்த அரசியல் யாப்பு விதிகளை மீறாதவையாகவே இருக்க வேண்டும்.

**2.** பாராளுமன்றத்தாலோ அல்லது எந்தவொரு மாகாண சபையாலோ ஆக்கப்படும் எந்தவொரு சட்டமும் இலங்கையின் அரசியல் யாப்பின் அனைத்து விதிகளுக்கும் உட்பட்டதா அல்லது எந்தவொரு அரசியல் யாப்பு விதிக்கும் முரணானதா என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் இலங்கையின் உச்ச நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு.

**3.** மாகாண சபைக்கு அரசியல் யாப்பு விதிகள் மூலமாக வழங்கப் பட்டுள்ள எந்தவொரு அதிகாரமாயினும் கொழும்பு மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரப் பிரயோகத்தின் விளைவாக மீறப்படுகிறதா அல்லது மீறப்பட்டுள்ளதா என்பதை நிர்ணயிக்கிற அதிகாரமும் உச்சநீதிமன்றத்துக்கே உரியதாகும்.

அதேபோல

**4.** மாகாணசபையின் எந்தவொரு நிறைவேற்று அதிகாரப் பிரயோகமும் கொழும்பு மத்திய அரசாங்கத்தின் எந்தவொரு அதிகாரத்திலும் தலையீடு செய்கிறதா அல்லது தலையீடு செய்துள்ளதா என்பதை நிர்ணயிக்கிற அதிகாரமும் உச்சநீதிமன்றத்துக்கே உண்டு.

**5.** இலங்கையில் ஒரு சட்ட நகல் (Bill) பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படுவதற்கும் அதனை சட்டமாக பாராளுமன்றம் நிறைவேற்றுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் அந்த சட்ட நகல் அரசியல் யாப்பை மீறுகிறதா இல்லையா என்பதை உச்சநீதிமன்றம் ஆய்வு செய்து முடிவு கூறுவதற்கான அதிகாரத்தை உச்சநீதிமன்றத்துக்கு இலங்கையின் அரசியல் யாப்பு வழங்குகிறது.

**6.** அதேவேளை, இலங்கையின் அரசியல் யாப்பானது, பாராளுமன்றம் ஒரு சட்டத்தை ஆக்கியதன் பின்னர் அதனை மீளாய்வு செய்யும் அதிகாரத்தை உச்சநீதிமன்றத்துக்கு வழங்கவில்லை.

**7.** நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டமாயினும் சரி அல்லது பாராளுமன்றத்தினால் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு சட்டமாயினும் சரி அதன் அரசியல் யாப்பு வலிமையை ஆய்வு செய்யும் அதிகாரம் இலங்கையின் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கப்படாமையானது ஒரு நல்ல - சரியான "சட்டத்தின் ஆட்சி" முறைக்கு உகந்ததோ பொருத்தமானதோ அல்ல.

எனினும் அந்தக் குறைபாடு தொடர்பான விடயத்தை நான் இங்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. நான் இங்கு கூற விழைவது,

**8.** மாகாண சபையினால் ஆக்கப் படும் எந்தவொரு சட்டமாயினும் அல்லது மாகாண அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தீர்மானமாயினும் அது அரசியல் யாப்புக்கு உட்பட்டதா இல்லையா என்பதை ஆளுநரோ அல்லது ஜனாதிபதியோ தீர்மானிக்க முடியாது. அந்த அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு மட்டுமே உடைய அதிகாரமாகும்.

**9.** மேலும், மாகாண சபைக்கு என்னென்ன சட்டவாக்க அதிகாரங்கள் உள்ளன, அத்துடன் என்னென்ன விடயங்களில் எவ்வெவ்வகையாக மாகாண சபைகளுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளன என்பதையும் அரசியல் யாப்பு விதிகளின் மூலமாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளன.

**10.** எனவே, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது நடைமுறையிலிருக்கும் இலங்கையின் அரசியல் யாப்பே தவிர நாட்டின் ஜனாதிபதியோ அல்லது மாகாணங்களின் ஆளுநரோ அல்லது மத்திய அமைச்சர்களோ அல்ல என்பதை முதலில் இங்கு தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.




**11.** அரசியல் யாப்பின் விதிகளுக்கு அமைவாக சட்ட நகலை ஆக்கி அதனை முறைப்படி மாகாண சபையால் நிறைவேற்றுகிற போது அதனை ஒரு வல்லமையான சட்டமாக்குவதற்கு ஆளுநர் கையொப்பம் இடல் வேண்டும்.

**12.** அவ்வாறு அது சட்டமானதும் அந்த சட்டத்தின்படியாக கூறப்பட்டுள்ள கடமைகளை, பொறுப்புக்களை, அதிகாரங்களை நிறைவேற்றும் - பிரயோகிக்கும் அதிகாரம் மாகாண அரசாங்கத்துக்கு உரியதாகும்.

**13.** அந்த சட்டம் அரசியல் யாப்புக்கு முரணானது என ஆளுநர் கருதினால் அதனை வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஜனாதிபதியினூடாக உச்சநீதிமன்றத்தின் இறுதி முடிவுக்காகச் சமர்ப்பிக்க வேண்டுமே தவிர ஆளுநரோ அல்லது ஜனாதிபதியோ அந்த சட்டத்தை தமது விருப்பப்படி நிராகரிக்க முடியாது.

**14.** மாகாண அரசாங்கத்துக்கான அதிகாரங்கள் இவ்வாறு ஆக்கப்படும் சட்டங்களின் ஊடாக கிடைக்கிறதே தவிர, ஜனாதிபதி தருவதோ அல்லது ஆளுநர் தருவதோ அல்ல.

சட்ட மேதையான முதலமைச்சர் சட்டங்களை சட்டபூர்வமாக அணுகுவதை விட்டுவிட்டு "ஜனாதிபதி சட்டப்படி நடக்கவில்லை", "ஜனாதிபதி சொன்னபடி நடக்கவில்லை", "ஆளுநர் விடுகிறார் இல்லை", "ஆளுநர் சொல்லுக் கேட்கிறார் இல்லை" என்று சின்னப்பிள்ளைகள் அழுவது போல கருத்துக் கூறுவது சரிதானா? என்பதே எனக்குப் புரியாத கேள்வியாக உள்ளது.

(தொடரும்)

# கேட்க வாய்ப்பேற்படுத்தியதுக்கு நன்றி!

இலக்கிய மன்றத்தில் குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. தலைமையில் அறிஞர் பொ.திருகூடசுந்தரம் பேசினார். உண்மையில் திருகூடசுந்தரம் ஒரு மேதை. மிகப் பயனுள்ள பல நூல்களை எழுதியிருக்கிறார். இருப்பினும் அந்த மேதை காலத்தின் அருமையை அறியவில்லை. மேடையில் எஸ்.ஏ.பி. அருகே அமர்ந்து நான் தவிக்கிறேன். திருகூடசுந்தரம் பேசிக் கொண்டேயிருக்கிறார். இவர் எப்போது முடிப்பது? எஸ்.ஏ.பி. எப்போது பேசுவது? ஒரு துண்டுக் கடிதம் எழுதி ஒரு சிறுவனிடம் கொடுத்து அனுப்பினேன். அவர் அதையும் படித்துவிட்டுப் பேசிக் கொண்டேயிருந்தார்! நான் மெல்ல அவர் அருகே சென்றேன். மெல்லிய குரலில் "எட்டு மணி ஆகப் போகிறது. தலைமை வகிக்கும் எஸ்.ஏ.பி. பேச வேண்டும். இந்த மண்டபத்தை எட்டரை மணிக்கு ஒப்படைக்க வேண்டும்!" என்றேன்.




அவர் என்னைப் பார்த்தார். "நான் நான்கைந்து மணி நேரம் பேச வல்லவன். ஆனால் விக்கிரமன் என் நண்பர். எஸ்.ஏ.பி.யும் என் நண்பர். வளரும் பத்திரிகையாளர். அவருக்குப் பேச வாய்ப்பளித்து இத்துடன் என் பேச்சை நிறுத்துகிறேன். மற்றொரு நாள் தொடர்வேன்!" என்றார். அந்த மற்றொரு நாளை ஏற்படுத்த நான் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை!

தலைமை உரை நிகழ்த்த எழுந்த எஸ்.ஏ.பி. "அறிஞர் பொ. திருகூடசுந்தரம் இவ்வளவு நேரம் பேசிய பிறகு நான் பேசுவதற்கு என்ன இருக்கிறது? என்னை அழைத்து இவ்வளவு நேரம் பொ.திருகூடசுந்தரம் பேச்சைக் கேட்க வாய்ப்பேற்படுத்திய இலக்கிய மன்றத்திற்கும் அதன் தலைவர் விக்கிரமனுக்கும் நன்றி" என்று கூறி அமர்ந்தார்!

அவரை வழியனுப்ப ரயில்நிலையம் வரை சென்ற என்னை அருகே தனியே அழைத்து, "விக்கிரமன்! இனி என்னை எந்தக் கூட்டத்திற்கும் அழைக்காதீர்கள். இதுதான் நான் கலந்துகொள்ளும் கடைசிக் கூட்டம். உங்கள் சங்கத்தில் மட்டுமல்ல எங்குமே இதுதான் கடைசி. உங்களுக்குத் தெரியும், என் ஒப்புதல் இல்லாமல் ஒரு பக்கம் கூட அச்சேறாது. மணி இப்போது எட்டரை. ஏழு மணிக்கு வருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். நான் போய்ச் சேர இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும். நான் அங்கு இருந்திருந்தால் இந்த இரண்டு மணி நேரத்தில் 60,000 பிரதிகள் அச்சாயிருக்கும். எனக்காக அங்கே எவ்வளவு பேர் காத்திருப்பார்கள். நேரம் வீண். நீங்கள் அழைத்ததால் என்னால் தட்ட முடியவில்லை. அதனால் இனி என்னை அழைப்பதை தயவுசெய்து மறந்து விடுங்கள்!"

அந்த வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

('நினைத்துப் பார்க்கிறேன் நூலில் விக்கிரமன்)

# சின்னச் சின்ன...

☯ பிரான்சிலும் ஜப்பானிலும் உள்ள சில ஹோட்டல்களில் சாப்பிட வரும் வாடிக்கையாளர்கள் உணவை வீணாக்கினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. பிரான்சில் உள்ள ஹோட்டல்களில் இதுகுறித்து வாடிக்கை யாளர்களுக்குத் தெரிவிக் கும் வகையில் ஹோட்டலில் பல இடங்களிலும் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. இதேபோல் ஜப்பான் ஹோட்டல்களில் தமது சிலவகை உணவுகளை பல அரிதான பொருள்களைக் கொண்டு தயாரிப்பதாகவும் அதை வீணாக்கினால் அபராதம் விதிக்கப்படுமெனவும் ஹோட்டல் உரிமையாளர்கள் கூறுகின்றனர்! குறிப்பிட்ட உணவை வீணாக்கினால் வாடிக்கையாளரின் பில்லில் அபராதமாக 20 டொலர்கள் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது.



☯ இந்தியாவிலுள்ள பிகாரில் ஹசாரிபாக் என ஒரு நகரம் உள்ளது. ஆயிரம் மரங்கள் அடர்ந்த மாபெரும் மாந்தோப்புக்கு "ஹசாரி" எனப் பெயர். இந்த







மாமரத்தைச் சுற்றி முதலில் ஒரு கிராமம் எழுந்தது. பிறகு அது காலத்தால் பெரிய நகரமாக மாறி, இன்று ஹசாரிபாக் என அழைக்கப்பட்டு வருகிறது.

☯ ஸ்பெயின் நாட்டின் ஆளுகைக்குட்பட்ட கானரி தீவுகளில் விசில் அடிப்பது பற்றிய பாடமும் உண்டு. அதிலும் இது கட்டாயப் பாடங்களில் ஒன்று. இந்தப் பாடசாலைகளில் பிறப்பு, இறப்பு, திருமணம், விருந்து, ஆபத்து, உதவி உள்ளிட்ட நல்லது கெட்டது அனைத்துக்குமான விசில் முறை யைக் கற்றுக் கொடுக்கிறார்கள். எனவே விசில் ஒலிக்கும்போதே அது எந்த வகையைச் சார்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பகுதி யில் அதிக அளவில் காணப்படும் ஆள் அரவமற்ற பகுதிகளில் விவசாயம் செய்பவர்கள், பயணிகள் ஆகியோர் கண்ணுக்குத் தெரியாத தொலைதூரத்தில் இருப்பவர்களுக்குத் தங்களைத் தெரிவிக்க விசில் முறையையே பயன்படுத்துகிறார்கள்.

சுனாமியால் பாதிக்கப்படாது தப்பிய பகுதி ஜப்பானில் "தஷி ரோஜிமா" என்ற இடமாகும். இதன் மறுபெயர் "பூனைத்தீவு" என்கின்றனர். அங்குள்ள ஒவ்வொரு வீட்டிலும் பூனை இருக்கும். பூனையை அன்புடன் வளர்த்தால் துரதிர்ஷ்டங்களைத் தவிர்த்து அதிர்ஷ்டங்கள் குவியும் என்று இத்தீவு மக்கள் நம்புகின்றனர். பூனைத்தீவில் சுனாமியால் ஓர் உயிர்ப்பலிகூட இல்லாமல் போனதால் ஜப்பானின் பிற பகுதிகளிலும் தற்போது பூனைகளை வளர்க்கத் தொடங்கியுள்ளனர்!

☯ ஈராக் நாட்டில் 18 வயது பூர்த்தியான பெண்கள் மட்டுமே திருமணம் செய்துகொள்ள சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷியா பிரிவு மக்களின் வேண்டுகோளை ஏற்று 15 வயது பூர்த்தியான பெண்கள் குடும்பத்தின் பாதுகாவலரின் சம்மதம் பெற்று திருமணம் செய்துகொள்ள அனுமதித்து சட்டம் திருத்தப்பட உள்ளது. இதன் மூலம் குழந்தைகள் திருமணத்துக்கு ஈராக் மாற இருப்பதாக லண்டன் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

☯ கம்போடியா நாட்டில் சித்திரை முதல் நாள் அன்று, பருவ விதைப்பை ஆரம்பிக்க, தங்கத்தினால் ஆன ஏர் கொண்டு ராஜ பரம்பரையினர் நிலத்தில் உழுது ஆரம்பித்து வைப்பர். பின்னர் உழவர்கள் தத்தம் வயல்களில் உழுவார்கள். இது உழவு சம்பிரதாயம் என்பர். இன்றும் கம்போடியாவில் கடைப்பிடிக்கப்படுகிறது.

☯ தமிழ்நாட்டில் விளைவிக்கப்படும் ஒரு வகை நெல்லின் பெயர் "சித்திரைக்கார்". இதிலிருந்து கிடைக்கும் அரிசி சமையலுக்கும், பலகாரங்கள் செய்யவும் மிக ஏற்றதாம்.

"சித்திரைப் பத்தில் தென்னை நடு" என்று ஒரு பழமொழியும் உள்ளது. சித்திரை பத்தாம் தேதி புதிய தோப்புகளில் தென்னங்கன்றுகள் நட்டால், அத்தனையும் மரங்களாகும் என்பது நம்பிக்கை.

☯ ரஷ்யாவில் ஒரு விழாக்காலத்தின்போது தட்டையான பணியாரத்தில் தேன், புளித்த கிறீம்கள், நன்னீர் மீன்கள் மற்றும் சில வகை பெரிய மீன்களின் முட்டைகளை இணைத்துச் சாப்பிட்டு மகிழ்கிறார்கள். கிராமப்புற திருவிழாவான இது பெப்ரவரி 24 முதல் மார்ச் 2 வரை நடக்கிறது!

☯ ஸ்பெயின் நாட்டில் ஒவ்வோராண்டும் ஜனவரி மாதம் 29 ஆம் திகதியில், "புனித செபஸ்டியன் நாள்" அன்று. "ஜர்ராம்ப்ளாஸ்" திருவிழா நடக்கிறது. துண்டு துண்டான பல வண்ணத் துணிக-ளில் தைக்கப்பட்ட ஆடையை அணிந்து கொண்டு. முகத்தில் பேய் மாதிரியான முகமூடியை மாட்டிக் கொண்டு, ஒருவர் மேளம் அடித்துக் கொண்டே தெருவில் நடந்து வருவார். அவர் மீது மக்கள் டேர்னிப் கய்களை வீசியெறிவார்கள். டேர்னிப் காய்களை வீசியெறிந்து அவரை விரட்டுவது, தீமை-களை விரட்டியடிப்பதைக் குறிக்கிறதாம்!

☯ பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து விடுதலை பெற்று ஐம்பதாண்டுகளுக்கு மேலா-கியும் பிரெஞ்சுக் கலாசாரம் தொடர்ந்து அங்கே பின்பற்றப்பட்டு வருகிறது. வீதிகளில் இறுதி ஊர்வலம் செல்லும்போது, நான்கு சக்கர வாகனங்கள் ஓர் ஓரமாக நின்றுவிடும். வண்டிகளில் வந்தோர் இறங்கி வெளியே நிற்பர். இரு சக்கர வாகனங்களில் வருவோரும் ஓரமாக நிறுத்திவிட்டு நிற்பர். நடந்து செல்வோர் அங்கேயே நின்று, ஊர்வலம் தங்களைக் கடந்து சென்ற பின்னரே அடியெடுத்து வைப்பர். வீடுகளுக்குள் இருப்போரும் வெளியே வந்து கடைசிப்பயணம் செல்பவருக்கு இறுதி மரியாதையைச் செலுத்துவர்.

# ஜெயகாந்தன்

நாம் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது இரண்டுபேர் இயக்குநர் பாக்கியராஜின் பாக்யா இதழிலிருந்து வந்தனர். ஜெயகாந்தன் தமது மாலை மயக்கம் சிறுகதைத்தொகுப்பை எடுத்து அதில் ஒரு சிறுகதையை தெரிவுசெய்து பிரசுரிக்குமாறு சொல்லிக்கொடுத்தனுப்பிவிட்டு - விட்ட இடத்திலிருந்து உரையாடலைத் தொடங்கினார்.

ஆனந்தவிகடனில் வெளியான பிரசித்திபெற்ற முத்திரைக்கதை அக்கினிப்பிரவேசம் ஆனந்தவிகடன் பொன்விழா மலரில் மறுபிரசுரம் கண்டது. ஆனால் அவரது சிறுகதை களுக்கு முத்திரைக்கதை தகுதியை வழங்கிய - ஜெயகாந்தனின் பல தொடர்கதைகளை வெளியிட்ட அதே ஆனந்தவிகடனின் பொன்விழாவில் அவர் கலந்துகொள்ளவில்லை.

ஏன்? என்று கேட்டதற்கு திவசச் சாப்பாடு என்று மாத்திரம் இரத்தினச் சுருக்கமாக பதில் அளித்தவர் ஜே.கே. அப்படிப் பேசக்கூடிய துணிவு அவருக்கேயுரித்தானது.

அக்காலப்பகுதியில் ஜெயகாந்தன் ஒரு ஹீரோவாக கொண்டாடப்பட்டார்.

ஜெயகாந்தனும் தடாலடியாக அறிவிப்புகளை பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தார்.

"நான் எந்தக் கட்சிக்கும் தாலி கட்டிக்கொண்டதில்லை."

"எழுத்து எனது ஜீவன். ஜீவனம் அல்ல."

என்பன அவரது கம்பீரமான குறிப்பிடத்தகுந்த வாசகங்கள்.

ஜெயகாந்தன் செல்லுமிடமெங்கும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை விதைத்துவிட்டு விடுவார். அதனை எதிர்க்கருத்துக்களே நீராகச் சுரந்து வளர்த்துவிட்டுவிடும்.

ஜெயகாந்தனிடம் நாம் கற்றுக் கொள்வதற்கு குறிப்பிடத்தகுந்த சில பண்புகள் இருக்கின்றன என்பதற்கு நானறிந்த ஒரு சம்பவத்தை இங்கு பதிவுசெய்கின்றேன்.

1992 இல் நடந்த சம்பவம். இக்காலப்பகுதியில் கோவி. மணிசேகரனுக்கு அவர் எழுதிய குற்றாலக்குறிஞ்சி என்ற சரித்திர நாவலுக்கு சாகித்திய அகடமி விருது கிடைத்திருந்தது. குறிப்பிட்ட நாவலில் பல வரலாற்றுத்தவறுகள் இருப்பதாக எதிர்வினைகள் வெளியாகின. சிலர் சாகித்திய அகடமி தேர்வுக்குழுவினரை பகிரங்கமாக கடும் விமர்சனம் செய்துகொண்டிருந்தனர். அச்சமயம் சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவா-மிநாதன் தமது நிருபரையும் ஒரு போட்டோகிராபரையும் அனுப்பி சில மூத்த எழுத்தாளர்களிடம் குறிப்பிட்ட சாகித்திய விருது வழங்கலில் ஏற்பட்டிருக்கும் குழறுபடிகள் பற்றி கருத்துக் கேட்டுவருவதற்காக அனுப்பியிருந்தார்.

அந்த இருவரும் ஜெயகாந்தனிட மும் கருத்தறிய வந்தார்கள். அப்பொழுது ஜெயகாந்தன் தமது அலுவலகத்தில் குமுதம் குழுமத்தில் பணியாற்றிய பால்யூ என்ற நிருபரு டன் உரையாடிக்கொண்டிருந்தார்.

கோமல் அனுப்பிய இருவரும், தாம் வந்த காரணத்தை ஜெயகாந்தனி டம் சொன்னதும் - அவர் விருட்டென எழுந்து கடும் கோபத்துடன், "யாரோ விருது கொடுக்கிறான். யாரோ அதனை வாங்குகிறான். உங்களுக் கென்னைய்யா வயிற்றெரிச்சல்... போங்கடா..." -என்று அடிக்காத குறையாக அந்த இருவரையும் விரட்டிக்கலைத்துள்ளார்.

அதன் பின்னர் என்ன நடந்திருக் கும்? அதே கோபத்துடன் திரும்பி வந்து அமர்ந்து அந்தக் கோபத்துக் கான காரணத்தைத்தானே வந்திருப்ப வரிடம் சொல்லத்தோன்றும். ஏனென்றால் ஏற்கனவே வந்திருந்து உரையாடிக்கொண்டிருக்கும் குமுதம் நிருபர் பால்யூ ஜெயகாந்தனின் கடும்கோபத்தை அக்கணமே நேரில் பார்த்தவர்.

ஆனால் - ஜெயகாந்தன் முற்றிலும் ஆச்சரியப்படும்விதமாக அந்தக்கண நேர கோபத்தை தணித்துக்கொண்டு வெகு நிதானமாக பால்யூவுடன் உரையாடலை - எந்த இடத்தில் நிறுத்தினாரோ அதே இடத்திலிருந்து தொடர்ந்தாராம். வந்தவர்களைப் பற்றியோ. சுபமங்களா பற்றியோ கோமல் சுவாமி நாதன் பற்றியோ சாகித்திய விருது பெற்ற கோ.வி.மணிசேகரனைப் பற்றியோ அவர் எதுவுமே பேசவில்லையாம்.

தன்னைச் சந்திக்க வந்தவருக்கு எதிர்பாராத அந்தச் சம்பவமும் தமது இயல்பான கோபமும் சம்பந்தமற்றது என்ற நாகரீகம் தெரிந்தவர் ஜெயகாந்தன் என்று பதிவு செய்கிறார் பால்யூ.

ஜெயகாந்தனின் கோபத்தை அவரை நன்கு தெரிந்தவர்கள் நிராகரிப்பார்கள். ஆனால் ஜெயகாந்தனை நிராகரிக்கவே மாட்டார்கள்.


ஜெயகாந்தனுக்கு இலக்கிய முகம் இருந்ததுபோன்று திரையுலக முகமும் இருந்தது. ஆனால் அந்த முகத்தை அவர் தொடர்ந்தும் அங்கே தக்கவைத்துக் கொள்ளாமல் கௌர வமாகவே ஒதுங்கிக்கொண்டார்.

தமிழ்த்திரையுலகில் முக்தா ஶ்ரீநிவாசன், நாகேஷ், சந்திரபாபு, சிவகுமார், ஶ்ரீகாந்த், லட்சுமி - எஸ். வி.சுப்பையா இயக்குநர்கள் பிம்சிங், மல்லியம் ராஜகோபால், விஜயன் உட்பட பலரின் இனிய நண்பரான ஜெயகாந்தனின் திரைப்படங்கள் இன்றும் பேசப்படும் காவியங்கள்.

உன்னைப்போல் ஒருவனையும் யாருக்காக அழுதானையும் திரைப் படங்கள் இயக்கும் எந்தவொரு முன் அனுபவமுமே இல்லாமல் தானே இயக்கியவர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் மஞ்சக்குப்பம் என்ற ஊரில் பிறந்து மூன்றாம் வகுப்பு வரையுமே கற்றுக்கொண்டு தமது 12 வயதில் வீட்டை விட்டு ஓடி சென்னைக்கு வந்து கம்யூனிஸ்ட் கட்சியின் பாசறை யில் தன்னை வளர்த்து செப்பனிட்டுக் கொண்ட ஜெயகாந்தனை ஒரு சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சி புறக்கணித்திருந்தாலும் அவருக்கு உயர் விருதுகள் கிடைத்த தருணங்களில் அதன் தலைவர்கள் நேரில் சென்று வாழ்த்தினார்கள்.

ஜெயகாந்தன் 2008 ஜனவரியில் அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது




சென்று பார்த்தேன். மருத்துவமனை கட்டிலில் வெகு உற்சாகமாகவே அமர்ந்து அடிக்கடி தமது மீசையை தடவியவாறு உரையாடினார். அப்பொழுது நடிகர் பார்த்திபனும் அவரைப் பார்க்க வந்தார். முதல் நாள் கமலஹாசன் வந்து பார்த்துவிட்டுப்போனதாகச் சொன்னார்.

தமிழக கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களினால் பல வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட பாதை தெரியுது பார் படத்தில் ஜெயகாந்தன் இரண்டு பாடல்களை எழுதியிருக்கிறார்.

அதில் ஒன்று எம்.பி.ஶ்ரீநிவாசனின் இசையமைப்பில் பி.பி. ஶ்ரீனிவாஸ் பாடும்---

தென்னங் கீற்று ஊஞ்சலிலே
தென்றலில் நீந்திடும் சோலையிலே
சிட்டுக்குருவி ஆடுது
தன் பெட்டைத்துணையைத்
தேடுது...

இந்த இனிமையான பாடலையும் அதன் மென்மையான இசையையும் இன்றும் கேட்டுக்கொண்டிருக்கலாம். ஜெயகாந்தனின் பல படைப்புகள் போன்று சாகா வரம் பெற்ற பாடல் அது.

- முருகபூபதி கட்டுரையிலிருந்து.

# மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# கவுணாவத்தை வேள்வி தொடர்பான ஒரு கருத்துக்களம்

பல எதிர்ப்புகளின் மத்தியில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கடந்த ஞாயிறு அன்று அரங்கேறிய அந்த உயிர்ப்பலி தொடர்பான ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்த மக்கள் முரசு முன்னெடுக்கும் ஓர் கருத்துக் களம் இது.



## ஏற்கமுடியாத ஓர் வழிபாட்டு முறையிது உடன் நிறுத்த வேண்டும்



முன்பொரு காலத்தில் தமிழில் பூசைசெய்யும் ஆல யங்களில் காணப்பட்ட வழிபாட்டு முறை களே இவையாகும். சைவக் குருக்களோ அல்லது இந்து மதக் குருக்களோ பூசை செய்யும் ஆல யங்களில் இது நிகழ்த்தப்படுவ தில்லை. இது ஆகமத்திற்குப் புறம் பான ஓர் வழிபாட்டு முறையாகும். யாழ்ப்பாண நகர்ப்புறத்தில் உள்ள கோட்டை முனியப்பர் ஆலயத்தில் முன்பொரு காலத்தில் நித்திய வேள்வி என இது இடம்பெற்றது. இந்த வேள்வியை மேற் கொள்ளும் நபரின் மனைவி குறித்த அந்த வேள்வி வாளாலேயே வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. கவுணாவத்தையில் வேள்வி செய்யும் பரம்பரையும் கவலைக்கிடமான சாவுகளைத்தான் சம்பாதித்து வருகின்றனர்.

சமயப் பெரியார்கள் இது தொடர்பான விழிப்பு ணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அடுத்தடுத்த ஆண்டுகளில் இதை அனைவரும் முனைப்புடன் செயற்பட்டு நிறுத்த வேண்டும் என்பதே எமது விருப்பம்.

*சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள்*
*தலைவர்*
*சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்.*

## வன்முறைக்கு வழிசமைக்கும் வழிபாட்டு முறைகள் இவை



மக்களின் வன்முறைப் போக் கிற்கு இது ஓர் எடுத்துக்காட்டே யாகும். நவநாகரிகப் போக்கில் பலதையும்பத்தையும் சிந்திக்க முனைந்த எமது சமூகம் வன்முறை யில் வழி வந்த இந்த வழிபாட்டு முறையில் தவறுள்ளது என ஏன் சிந்தித்து செயற்பட மறுக்கின்றது என்பது தான் புரியவில்லை.

மதத்தின் பெயரில் மகிமை இழக்க வைக்கும் செயற்பாடு இது. இதை நிறுத்தி அர்த்தமுள்ள இந்து மதத்தின் அர்த்தங்களை பறைசாற்றும் செயற் பாடுகளை வடிவமைக்கவேண்டும் என்பதே எனது கருத்து.

*வி.ஏ.சிவராசா*
*ஜோதிர் வித்யாரத்னா - சோதிடர்.*

## மாற்றமுடியாத மக்களின் பலவீனக் கொள்கை

மாற்றங்கள் தான் மாறாத ஒன்று அத்தனை பேர்க்கும் இதுதவறு என்று தெரிந்தும் மாற்றமுடியாத மாறாக் கொள்கையாக மக்கள் மனங்களில் இது நின்று நிலவுகின்றன பழமையின் பலவீனக் கொள்கைகள் பலவற்றை நாம் மாற்றிவிட்டோம். இதனை நாம் மாற்ற முற்படவேண்டும்.

*கு.அகிலன்*
*அதிபர்*
*அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை.*

## ஆண்டவன் சந்நிதியில் இடம்பெறும் அர்த்தமற்ற செயல்

அனைத்து உயிர்களும் மாண்புடன் இந்த அகில மதில் வாழ வேண்டும். ஓர் உயிரைக் கொன்று ஓர் உயிர் வாழ்வதை ஒரு மதமும் உலகில் ஏற்கவில்லை. கொல்லாமை, ஊன் உண்ணாமை என்பது தான் இந்து மதத்தின் இதயத்துடிப்பு. அர்த்தமற்ற செயல்கள் ஆண்டவன் சந்நிதியில் அரங்கேறு கின்றது. இதை நிறுத்த அனைவரும் முன்வர வேண்டும். - *பிரகாஸ்*

*சலவைத் தொழிலாளி கோண்டாவில்.*

## உண்மைச் சைவர்கள் ஒருபோதும் இதை ஏற்கமாட்டார்கள்



மனித நாகரிகம் தொடங்கிய கால கட்டத்தில் பல்வேறு சிந்தனைகள், நம்பிக்கைகளின் வழிபெற்ற வழி பாட்டு முறையே பலியிடல் ஆகும். மனிதன் நாகரிகமடைந்த காலத்தில் இது ஓர் மூட் நம்பிக்கை சார்ந்ததும் வன்முறையான செயல் எனபதை யும் உணர்ந்து உலகளாவிய ரீதியில் பல மதங்கள் பலியிடலைக் கைவிட்டு விட்டன. மரக்கறி உணவை சைவ உணவென்றும் மாமிச உணவை அசைவ உணவென்றும் கூறுகின்ற பாரம் பரியம் மிக்க நாம் இவ் அறிவியல் யுகத்திலும் மிருக பலியிடலை மேற்கொள்வது ஆச்சரியத்திற்கும், வருத்தத்திற்கும் உரியதாகும். உண்மைச் சைவர்கள் ஒருபோதும் பலியிடல்களை ஏற்கமாட்டார்கள்.

*திரு. செல்வமனோகரன்*
*செயலாளர்*
*சைவவித்தியா விருத்திச் சங்கம்,*
*திருநெல்வேலி.*

## அர்த்தமற்ற செயல்களால் அர்த்தமுள்ள இந்துமதம் அந்தஸ்து இழக்கின்றது




" இந்தச் செயற் பாட்டிற்கும் ஆகமம் சார்ந்த இந்து மத வழிபாட்டு முறைக் கும் எந்தத் தொடர் பும் இல்லை. அர்த்த மறற இந்த செயல் களால் இந்து மதம் அந்தஸ்தை இழக்கின்றது.

இது தொடர்பான ஓர் விழிப் புணர்வை ஏற்படுத்துவது இன்றைய கட்டாய தேவை. இதற்காக தினமுரசு பத்திரிகைக்கு மனமார்ந்த நன்றிகள். உண்மை நிலைக்க வேண்டும். செயற் பாட்டில் அர்த்தங்கள் அவதாரம் பெறவேண்டும்.

*பாலகணேசன்*
*விரிவுரையாளர்*
*யாழ்ப்பாணம் தேசியக் கல்லூரி.*

- மாற்றமுடியாத மக்களின் பழமைக்கொள்கையால் மதங்கள் மகிமை இழக்கின்றன.
- உயிர்ப்பலி கொடுத்தால் தான் உயிர்வாழ முடியுமென்ற அர்ததமற்ற வார்த்தைகள் ஆண்டவன் சநநிதியில் அரங்கேறு கின்றன.
- ஆகமத்திற்கு அப்பால் நடக்கும் அற்ப கொள்கையால் அவப் பேர் சைவத்தின் பால் சரிகின்றன.
- தீர்வே கிடையாதா? இதைத் தீர்க்க முடியாதா?... முடிவே கிடையாதா? இதை முடிக்க முடியாதா? யார் சொன்ன இந்த நாடகம் யார் பெயரில் அரங்கேறுகின்றன?

## அடியார்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள் இது



ஆலயங்கள் என்பது ஆண்ட வன் வாழும் புனிதமான சன்னிதானம். அது அன்பு, கருணை, பரிவு, ஒழுக் கம நிறைந்த ஒரு புனிதமான இடம். இதில் எந்த தவறுகளும் செய்யாத மனிதருக்கு தீங்கு விளைவிக்காத மிருகங்களை கொல்வது என்பது பொருத்தமற்ற ஒரு செயற்பாடு. இதை உலகம் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளாது. எனவே அன்பு மிக்க ஆலய அறக்காவலர்களே! மாண்புமிக்க பக்தர்களே! உங்களின்கால் பணிந்து மன்றாடுகின்றேன் இத்தகைய வழிபாட்டு முறைவேண் டாம் ஆலயங்களில் புனிதமான வழிபாடடை மேற்கொள்ளுங்கள. ஆலயச் சூழலில் மிருகங்கள், பறவைகளை கருணையோடு வளர்த்துக்கொள்ளுங்கள் இரத்தத்தில் இஸ்ரம் கொண்ட மனிதர்களாக வாழ் வதை நிறுத்துவோம்.

*கலாநிதி ஆறுதிருமுருகன்*
*தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் -*
*தெல்லிப்பளை*

## கிராமிய தெய்வ வழிபாட்டு முறையிது

மக்களின் பழமைசார் கிராமிய தெய்வ வழிபாட்டு முறையில் இருந்து உருப்பெற்ற ஓர் வழிபாடே வேள்வியாகும். இது மக்களின் நம்பிக்கைசார் வழிபாட்டு அம்சங்களாகும். இதற்கு தடைபோட சட்டத்தில் இடமில்லை. அவ்வாறு தடை போட்டால் அது ஓர் மனித உரிமை மீறல்.

**கேள்வி:-** உயிர்களின் உரிமைகளை மீறுவது தவறில்லையா?

**பதில் :-** உயிர்களுக்கு இதுவரை உரிமைகள் அமுல்படுத்தவில்லையே.

*பொலிஸ் அதிகாரி ஒருவர்*

## உயிர்ப்பலிக்கெதிரான முதல் குரல் புத்தருடையது



உயிர்ப்பலிக்கெதிராக முதல் குரல் கொடுத்தவர் புத்தபெருமானாவார். அவி சொரிந்து ஆயிரம் வேள்வி செய்தலை திருவள்ளுவரும் கண்டித்துள்ளார். சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பலியிடலை நாவலர் கண்டித்துள்ளார்.

அப்போது சிலர் வேத முறமையென வாதிட்டபோது வேதத்தில் பலியிட்ட உயிர்களை மீள உயிர்ப்பித்தல் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. உங்களாலும் பலியிட்ட உயிர்களை மீள உயிர்ப்பிக்க முடியுமா? என வாதிட்டுள்ளார். ஆகவே பண்படாத ஓர் கட்டத்தில் உள்ள நடைமுறையை நாம் இவ்வளவு வளர்ச்சிகண்ட நிலையிலும் கடைப்பிடிக்க முயல்வது காட்டுமிராண்டித்தன மெனவே கூறவேண்டும்.

*திரு.சோ.பத்மநாதன்*
*பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர்,*
*தலைவர் சைவ வித்தியர்விருத்திச் சங்கம்.*

**இது தொடர்பான மறுப்பறிக்கைகளோ அல்லது ஆதரிப்புக் கட்டுரைகளோ வருமிடத்து பிரசுரிக்கப்படும்**

அனுப்பவேண்டி முகவரி :- **தினமுரசு** (மக்கள் முரசு)
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# திக்கம் வடிசாலையின் உற்பத்திகளை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்



திக்கம் வடிசாலையின் உற்பத்திகள் சர்வதேச தரத்திற்கு நிகராக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே தமது முக்கிய இலக்காகும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் மட்டுமல்லாது வடமாகாணம் முழுவதிலும் போத்தலில் அடைக்கப்படும் கள் தரமானதாகவும் சுத்தம் சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் செய்யப்பட வேண்டுமென்பதுடன் இதற்கான நியாய விலையும் நிர்ணயிக்கப்பட வேண்டியது அவசியமானது.

நீண்டகால பாவனைக்கு ஏற்ற வகையில் பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனைகள் பெறப்பட்டு கள் அடைக்கும் தொழிற்துறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் இந் நடவடிக்கையில் ஈடுபடும் சகல சங்கங்களும் அடிக்கடி ஆய்வுக்குட்படுத்த வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

எமது மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவுமே பனை அபிவிருத்திச் சபையும், பனை ஆராய்ச்சி நிறுவனமும் செயற்பட்டு வரும் நிலையில் இவற்றின் ஊடாக துறைசார்ந்தவர்கள் உரிய பயன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், திக்கம் வடிசாலையின் மதுபானம் உள்ளிட்ட உற்பத்திகள் யாவும் சர்வதேச தரத்திற்கு ஈடாக முன்னெடுக்கப்பட வேண்டுமென்பது மட்டுமன்றி அதனூடாக குறித்த தொழிற்துறைகளை மட்டுமன்றி துறைசார்ந்தோரது நலன்களைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதுவுமே முக்கிய நோக்காகவுள்ளது என்றார்.

இதன்போது பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கணேசன், பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் லோகநாதன், யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# சுயதொழில் பயிற்சி நெறி விண்ணப்பிக்க வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் மாற்றுவலுவுடையோருக்கான சுயதொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா தெரிவித்தார்.

2014 யூலை முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம திகதி வரையும் 6 மாத காலப்பகுதியை கொண்டதாக இப்பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

தையல், புத்தகம் கட்டுதல்,கைப்பணி வேலைகள் ஒட்டுசித்திர வாழ்த்து மடல் தயாரித்தல், கதிரை பின்னுதல்,கேக் தயாரித்தலும் அலங்காரமும், ஆகிய பயிற்சி நெறிகள் இடம்பெறவுள்ளது.

மாற்றுத் திறனாளிகளான 20 ஆண்களும், 20 பெண்களும் இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பயிற்சி நெறியில் பங்குபெறுவோருக்கு நாளாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவாக 110 ரூபாவும் பயிற்சி நிறைவில் 10,000 ரூபா பெறுமதியான உபகரணங்களும், 25,000 ரூபா சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் இது தொடர்பான தகவல்களைப் பெற இல,47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியிலுள்ள சங்கத்தின் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 0213217718 எனும் சங்கத்தின் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (90)

# நிர்வாகசபை தெரிவு

கந்தவனம் அருள்மிகு வண்ணிமரவேலவன் ஆலய பூங்காவனத் திருவிழா உபயகாரர்களுக் கான நிர்வாகசபைத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நிர்வாகசபைத்தெரிவு கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 5.45 மணியளவில் ஆலய மணிமண்டபத்தில் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் 30இற்கு மேற்பட்ட 09ஆம் திருவிழா பொதுச்சபை உபய உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கடந்த 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற திருவிழா சிறப்புக்கள் தொடர்பாகவும இவ்வாண்டு நடாத்தப்படவுள்ள விழா தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இப் பொதுச்சபைக்கூட்டத்திற்கு பொலிகண்டி கிழக்கு ஜே/394 கிராமஅலுவலர் எஸ். புலேந்திரன் கலந்து சிறப்பித்திருந்தார். இதன்படி 2014 ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபைத் தெரிவும் இடம் பெற்றது தலைவராக சி.சிவபாலசிங்கம் உப தலைவராக, சி.சிவகுமார், செயலாளராக வ.பரமானந்தராசா, உபசெயலாளராக, த.பரமானந்தம பொருளாளராக,வை.கேதீஸ் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 5பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (பட)



யாழ்.கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர், மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள் இணைந்து அண்மையில் டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணியை மேற்கொண்டபோது.

# வாரம் ஒரு காரம்

## ஐ.நா.விசாரணை தொடர்பாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன?



இன்றைய சூழலில் இலங்கையரசு பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையிலுள்ளது. ஐக்கியநாடுகள் சபையின் விசாரணையில் இருந்து தென்னாபிரிக்க மத்தியஸ்தம் மற்றும் அளுத்கம கலவரம் வரை பல துருவப்பிரச்சினைகள் அரசினை முற்றுகையிட்டுள்ளன. இப்பிரச்சினைகள் தொடர்பாக ஒவ்வொரு அமைச்சர்களும் தமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்திவருகின்றனர்.

குறிப்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவிற்கு யார் சாட்சியங்களை வழங்குவது தொடர்பான சர்ச்சை மிகப்பெரிய அரசியல் முரண்பாடுகளையும், ஆக்ரோசங்களையும் ஏற்படுத்தும் என்கின்ற எதிர்வு கூறல்கள் மேலெழுந்துள்ளன.

ஜனாதிபதி இதுதொடர்பாக வெளியிட்ட செய்திக்குறிப்பில் விசாரணைக்குத் துணைபோவோர்க்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேசியுள்ளார். இது ஏற்புடமைக்கு அப்பாலான கருத்தாக பெரும்பாலோரால் பார்க்கப்படுகிறது.

மிரட்டித் தலையடிபோட வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி பாவித்த தொனி அரசின் பால் உள்ள சர்வதேச குற்றப்பார்வையை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்திருப்பதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

மறுபுறத்தில் அரசுக்குள் இருந்து கொண்டு அரசினை விமர்ச்சித்த பல அமைச்சர்கள் இது தெடார்பாக கருத்துவெளியிடும் போது \\அரசின் செயற்பாடுகள் தவறாக இருப்பினும் தாய்நாட்டு அரசையே சர்வதேசத்தின் முன் குற்றவாளிக்கூண்டில் நிறுத்த நாம் உடன்பட மாட்டோம் என தெளிவாக குறிப்பிட்டுள்ளனர்.

உதாரணமாக அமைச்சர் திஸ்ஸ உட்பட இடதுசாரிக் கட்சிகள், மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் போன்றோர் இந்நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஹக்கீம் இது தொடர்பாக கருத்து வெளியிடும்போது,

**முஸ்லிம் காங்கிரசின் உயர்பீடத்தில் இது தொடர்பாக பல சர்ச்சைகள் எழுந்துள்ளன.** ***எது எப்படி இருப்பினும் இலங்கையரசுடன் முரண்பட்டு இலங்கையரசை சர்வதேசத்தின் முன் காட்டிக் கொடுத்து விட்டு இலங்கையில் சிறுபான்மையினம் வாழமுடியாது என்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.***

***எமது உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலைப்புத் தொடர்பாக இலங்கை அரசுடன் பேசிப் பெறவேண்டிய விடயங்கள் பல இருப்பினும் அதற்கு இது தருணமல்ல. இத்தருணத்தில் பொறுப்புடன் முடிவெடுத்து நாம செயறபடவில்லையானால் மாறாவடுக்களை அரசுக்கும் சிறுபான்மை இனங்களிற்கிடையிலும் உண்டுபண்ணி விடும்.***

***கடந்த கால முரண்பாடுகளைக் களைந்து எமது மக்களுக்கான உரி மைகளை வென்றெடுப்பதில் பல சிரமங்களை எதிர் நோக்கி வரு கின்றோம். மீண்டும் மீண்டும் முரண்பாடுகளை வளர்க்க நாம் முனையக் கூடாது*** என்றார்.

இதில் இரண்டு விடயங்களை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று இழப்புக்கள், பாதிப்புக்கள் நடந்தது உண்மைதான் அதற்கான பழிவாங்கலில் திருப்தி கொள்ளத் தேடுவதால் எதிர்காலத்தில் தமிழ் மக்களிற்கான ஓர் அரசியல் தீர்வு கிடைக்குமா? அரசியல்தீர்வினை யார் தருவது? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மனித உரிமைசார் அமுலாக்கங்களில் கையொப்பமிட்டு அங்கத்துவ நாடாக இணைந்தும் கூட ஐ.நா.விசாரணைக்கு துணிந்து தடைபோடும் அரசானது சர்வதேசம் தமிழர்க்கான தீர்வினைப் பெற்றுத்தர ஆமோதிக்குமா? இது கூட்டமைப்புசார் அர்த்தமற்ற முன்வைப்புக்களே தவிர இதில் எந்த உண்மையும் இல்லை.

மற்றையது ஐ.நா.விசாரணைகள் மூலம் இலங்கையரசு குற்றவாளியென முன்வைக்கப்பட்டால் பாதிக்கப்படப் போவது அரசா? இந்நாட்டு மககளா? சற்று சிந்தித்துப் பாருங்கள். பொருளாதாரத் தடையென்ற ஒன்று இலங்கைக்கு வந்தால் சிங்கள மக்களை விட பாதிக்கப்படப்போவது சிறுபான்மைத் தமிழ் மக்கள்தான் மேலும் அதிகமாக அல்லல்களை ஏற்பதாக இருக்கும்.

இவையெல்லாம் இருட்டிற்குள் இருக்கும் உண்மைகள், ஒளியேற்ற முஸ்லிம் காங்கிரஸ் போல் தெளிவாகச் சிந்திக்கும் அரசியல்வாதிகள் முன்னணித் தமிழ்த்தலைவர்களாக இல்லை. மறுபுறத்தில் யதார்த்த சிந்தனை கொண்ட அரசியல் வாதிகளை நாம் அவ்வளவாக ஏற்பதும் இல்லை.

# ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு வங்கிகளுடாக வழங்கப்படாது

## இரத்தானது சுற்று நிரூபம்

ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் பணிக்கொடுப்பனவை வங்கிகளினூடாக வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்யும் சுற்றுநிரூபம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

பணிக்கொடுப்பனவு தொடர்பில் எழுந்த பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மற்றும் கருத்துக்களையடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் ஓய்வூதிய ஆணையாளர் நாயகம் எஸ்.ஹெட்டியாராச்சியினால் இந்த சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வழங்கப்பட்டது போன்று ஓய்வு பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வூதிய திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டு வந்த பலன்கள் மீண்டும் கிடைக்க உள்ளன. இது தொடர்பான முழுமையான விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

# வறுமை கோட்டு மக்களுக்கு சமூக கொடுப்பனவுகள்

## சேகரித்த நிதிமூலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கொடி வார நிகழ்வில் 5,39,000 ரூபா திரட்டப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பி.ரி.எம்.இர்பான் தெரிவித்தார்.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை பிரதேச செயலகப் பிரிவுகளில் நடத்தப்பட்ட கொடிவார நிகழ்வுகளில் மேற்படி பணம் சேகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பணத்தைக் கொண்டு சமுர்த்தியிலுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு சமூகக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கான பயனாளிகள் தெரிவு ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியல் தேவைகளுக்காக தூண்டப்படுகிறது இனவாதம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டின் வரலாற்றையும் உலக வரலாற்றையும் நோக்கும் போது இனவாதம் தூண்டப்படுவது அரசியல் தேவைகளுக்காகவே என்பதை அறிந்து கொள்ள முடியும் என ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊவா மாகாண முலமைச்சர் வேட்பாளருமான சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட குழப்பமான நிலமையை உள்வாரியாக ஆராயும் போது அதில் மதவாதமோ இனவாதமோ இருப்பதைக் காணமுடியவில்லை. ஆனால் அதற்குள் அரசியல் தேவைகள் இருப்பதைக் காண முடிகிறது.

ஆட்சியாளர்களின் ஆட்சி அதிகாரம் கையை விட்டுச் செல்லப் போகும் நிலையில், அவர்கள் மத மற்றும் இனவாதத்தைத் தூண்டும் கீழ்த்தரமான தந்திரோபாயங்களை கையில் எடுக்க முயற்சிப்பார்கள்.

அரசாங்கம் சிங்கள வாக்கு வங்கியை இழக்கும் நிலைமையை எதிர்நோக்கி வருகிறது.

ஆட்சியாளர்களின் குறைப்பாடுகளை காணும் போது மக்கள் அவர்களை நிராகரிப்பார்கள்.

மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறை, நிவாரணங்களை இரத்துச் செய்தல், ஜனநாயக விரோத செயற்பாடுகள் காரணமாக அரசாங்கத்தின் மீது இருக்கும் மக்களின் நம்பிக்கை இல்லாமல் போகும்.

அப்படியான நேரத்தில் மீண்டும் மக்களின் ஆதரவை பெறுவதற்காகவும் அதிகாரத்தை தற்காத்துச் கொள்ளவும் அடிப்படைவாத சக்திகளை பயன்படுத்தி மக்கள் மத்தியில் பகையுணர்வுகளை தூண்டும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவார்கள்.

இதற்காக சம்பந்தப்பட்ட அடிப்படைவாதிகளுக்கு அரசாங்கத்தின் உதவியும் கிடைக்கும்.

இலங்கை போன்ற நாட்டின் எதிர்காலத்திற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியம் முக்கியமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான குழப்பமான நிலைமைகளை உருவாக்கி மக்களைத் தூண்டுவது மிகவும் ஆபத்தானதும் பாரதூரமானதுமான நிலைமையாகும் என வித்தியாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# வாழ்வின் எழுச்சித் திணைக்களம் பயனாளிகளுக்கு உதவித் தொகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் (சமுர்த்தி) கடந்த ஜனவரி மாதத்திலிருந்து மே மாதம் வரையிலும் 18 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா உதவித் தொகை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பி.ரி.எம். இர்பான் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவு கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், சமுர்த்தி பயனாளிகளின் இறப்புக் கொடுப்பனவாக 50 பேருக்கு தலா 10,000 ரூபாபடி 5 இலட்சம் ரூபாவும் பிறந்த குழந்தைகளுக்கான கொடுப்பனவாக 62 குழந்தைகளுக்கு தலா 5,000 ரூபா படி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் திருமணக் கொடையாக 56 பேருக்கு 2 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாவும் மாணவர்களுக்கான சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவாக 144 பேருக்கு 5 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் மருத்துவக் கொடுப்பனவாக 2 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாவும் வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முள்ளியவளை சந்தைக்கு படிப்படியாக வசதிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளைப் பொதுச்சந்தைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் சு.இரவீந்திரன் தெரிவித்தார்.

முள்ளியவளைச் சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் தாங்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக சந்தை வியாபாரிகள் விசனம் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் இது தொடர்பாக செயலாளர் தெரிவிக்கையில்,

"இறுதி யுத்தத்தில் முழுமையாக சேதமடைந்த முள்ளியவளைச் சந்தையானது 4.4 மில்லியன் ரூபா செலவில் மீண்டும் அமைக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து சந்தைக்குத் தேவையான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் சந்தைக்கான மின்சாரம் இன்மை மற்றும் மழை காலத்தில் தூவானம் படுதல் போன்ற குறைகள் மட்டும் காணப்படுகின்றன.

இருந்தும், அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதன்போது, சந்தையின் அடிப்படைத் தேவைகள் முழுமையடையும்.

மரக்கறி மீன், மற்றும் இறைச்சி வியாபாரிகளுக்கு மட்டுமல்லாது, வெற்றிலை வியாபாரம் போன்ற சிறு வியாபாரிகளுக்கும் சிறிய கடைகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சனத்தொகையை விடவும் அதிகரித்துள்ள கைபேசிகள்



இலங்கையில் மொத்த மக்களின் எண்ணிக்கையை விட கையடக்கத் தொலைபேசிகளின எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது இரண்டு கோடி மூன்று இலட்சம் "மொபைல்" தொலைபேசிகள் உள்ளன என்றார் 2011 இல் 34 இலட்சமும், 2012 இல் 34 இலட் சமும், கடந்த வருடத்தில் 41 இலட்சமும் "மொபைல" தொலைபேசிகள் இறக்குமதி செய்யப்பட்டன. சீனாவிலிருந்தும் ஹொங்கொங்கிலிருந்துமே அதிக எண்ணிக்கையான கைத்தொலைபேசிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்றார்

# உள்ளூராட்சி வாரத்தில் மக்கள் நலன்சார் நிகழ்வு


உள்ளூராட்சி வாரத்தையொட்டி மக்கள் நலன்சார் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அப்பிரதேச சபைச் செயலாளர் சு.இரவீந்திரன் தெரிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உள்ளூராட்சி வார நிகழ்வுகளில் கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதி வழங்கும் நடமாடும் சேவை, நூலக வாசகர்களை இணைத்தல், அனுமதி பெறாத விளம்பரப் பதாகைகளை அகற்றல், விசேடமான கழிவகற்றும் செயற்பாடுகள், டெங்கு விழிப்புணர்வுச் செயற்றிட்டம், மரம் நடுகை செயற்றிட்டம் ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்றைய தினம் சபையின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# 600 சீ.சீ.மோட்டார் சைக்கிள்கள் விரைவில் பொலிஸாருக்கு

## குற்றச் செயல்களை கட்டுப்படுத்த



(கொழும்பு)

வீதி விபத்துக்களை குறைக்கும் முகமாகவும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கிலும் சட்ட ஒழுங்கு அமைச்சினால் அதிவேக 600 சீ.சீ ரக மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாகவும் வீதி விபத்துக்களை குறைக்கும் முகமாகவுமே 315 அதிவேக 600 சீ.சீ. ரக மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்து 9 மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும அவர் மேலும் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தப்பிச் செல்வோரை உடனடியாக கைது செய்வதன் மூலம் விபத்துக்களை குறைக்க முடியுமெனவும் கொலை, கொள்ளை திருட்டு போன்றவற்றில் ஈடுபடுவோரை மடக்கிப் பிடிப்பதற்கு இந்தத் திட்டம் சிறந்த முறையில் நன்மை பயக்கும் எனவும் குறிப்பிட்டார்.

எனவே இந்தத் திட்டத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாவும் இதன் மூலம் நாட்டில் குற்றச் செயல்கள் குறைவடையும் எனவும் தெரிவித்தார்.

# இராணுவத்தினரால் உபகரணம் வழங்கல்

(பளை)

முகமாலை இளம் தென்றல் முன்பள்ளிக்கு 23 ஆவது கெமுனு படைப்பிரிவினால் கற்றல் உபகரணங்களும் சிற்றுண்டிகளும் அப்படையணியின் தளபதி கேணல் மாபொகம வினால் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு முன்பள்ளியில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. இதில் அப்பகுதி மக்கள் பங்குகொண்டனர். (37)

# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான பயிற்சிக் குறிப்புகள்

**இரசாயனவியல்**

**களிக்கந்தகத்தை தயாரித்தல்**

ஒரு முகவையில் நீரை ஆயத்தமாக வைத்துக்கொள்க. கந்தகத்தூளை ஒரு சோதனைக் குழாயில் 3 ச.மீ. ஆழத்திற்கு எடுத்து மெதுவாக வெப்பமேற்றுக. கந்தகம் நிறமாற்றம் அடைந்து 114.5$^0$C யில் உருகும். ஒரு அம்பர் (Amber) நிறத்திரவமாக மாறும். 160$^0$C யில் அதுபாகு (Viscous) ஆகமாறுகிறது. தொடர்ந்தும் வெப்பமேற்றுக. திரவம் கருமையடைந்து பாகுத்தன்மை குறைந்துவிடும். 444$^0$C யில் இது கொதித்து ஆவியைத்தரும். இந்நிலையில் கந்தகத் திரவத்தை குளிர் நீருக்குள் ஊற்றுக. கந்தகம் களிக்கந்தகமாக திண்ம நிலையடைகிறது.

**பளிங்குருவற்ற கந்தகம் : கூழ்க்கந்தகம்**

பொற்றாசிய பரமங்கனேற்றுக் கரைசலுக்குள் ஐதரசன் சல்பைட்டைச் செலுத்துக. அதன் ஊதா நிறம் மறைந்ததும் ஐதான HCI ஐ சேர்த்து இளம் சிவப்பு மங்கனசு சல்பைட்டை கரைக்கவும்.

$8H_2S + 2KMnO_4 \rightarrow K_2S + 2MnS + 8H_2O + 5S$
$MnS + 2HCI \rightarrow MnCI_2 + H_2S$
தூய வெள்ளை நிறமான கூழ்க்கந்தகம் மிகுதியாகவிருக்கும்

**ஐதரசன் சல்பைட்டு ($H_2S$)**

தயாரிப்பு : ஐதரசனை உருக்கிய கந்தகத்திற்கூடாகச் செலுத்தி ஐதரசன் சல்பைட்டை நேரடியாகத் தயாரிக்கலாம்.

$H_2 + S \rightarrow H_2S$

ஆய்வுகூடத்தில் ஐதரசன் சல்பைட்டைத் தயாரிப்பதற்கு இரும்பு சல்பைட்டுடன் ஐதரோக்குளோறிக்கமிலத்தை தாக்கமுறச் செய்யலாம். இப் பரிசோதனைக்கு கிப்பின் ஆய்கருவியை உபயோகித்தால் ஐதரசன் சல்பைட்டை வேண்டிய சமயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

$FeS + 2HCI \rightarrow H_2S \uparrow + FeCI_2$

பெரசு சல்பைட்டு தூய நிலையில் கிடைப்பதில்லை. அதனுடன் இரும்பு மாசுப்பொருளாகக் காணப்படுவதால் அமிலத்துடன் இரும்பின் தாக்கத்தினால் உருவாகும் ஐதரசனும், ஐதரசன் சல்பைட்டுடன் கலந்து காணப்படும். அந்திமணி சல்பைட்டுடன் செறிந்த ஐதரோக்குளோறிக்கமிலம் தாக்கமுறுவதாலும் ஐதரசன் சல்பைட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

$Sb_2S_3 + 6HCI \rightarrow 2SbCI_3 + 3H_2S$

**பௌதிகவியல்புகள்**

i) ஐதரசன் சல்பைட்டு ஒரு நிறமற்ற வாயு, ஏறக்குறைய கூழ்முட்டையின் மணத்தை உடையது.
ii) அது வளியிலும் சிறிதுபாரம் கூடியது.
iii) அது நீரில் ஓரளவு கரையும் கரைசல் ஐதரசன் சல்பைட்டின் மணத்தை உடையதாகும்.
iv) இது மிகுந்த நச்சுத்தன்மையான வாயு. சிறிதளவில் சுவாசித்தால் தலையிடி உண்டாகும். பெருமளவு சுவாசிக்கப்பட்டால் மரணம் சம்பவிக்கலாம். (1% அபாயகரமானது)
v) இதை இலகுவாக திரவமாக்கலாம். (கொதிநிலை = 60$^0$C) திண்மமாக்கலாம் (உருகுநிலை = -83$^0$C)

**இரசாயனவியல்புகள்**

i) ஐதரசன் சல்பைட்டு வளியில் நீலச்சுவாலையுடன் எரியும். வளிபற்றாக்குறையாக இருப்பின் நீரும் கந்தகமும் மட்டும் உண்டாகும்.

$2H_2S + 3O_2 \rightarrow 2H_2O + 2SO_2$

$2H_2S + O_2 \rightarrow 2H_2O + S$

ii) வெப்பக் கூட்டப்பிரிகை : ஐதரசன் சல்பைட்டு வெப்பத்தினால் ஐதரசனாகவும் கந்தகமாகவும் பிரியும்.

$H_2S \rightleftharpoons H_2 + S$

இத்தாக்கம் 310$^0$C யில் ஆரம்பித்து 770$^0$C யில் பூர்த்தியாகும்.

iii) அமிலவியல்பு : ஐதரசன் சல்பைட்டின் நீர்க்கரைசல் ஒரு இரு மூல அமிலமாகத் தொழிற்படுகிறது. இக்கரைசலை ஐதரோ சல்பூரிக்கமிலம் என்று அழைக்கலாம். உலர்ந்த ஐதரசன் சல்பைட்டுக்கு பாசிச் சாயத்தாளில் தாக்கமில்லை. ஆனால் ஈரலிப்பான ஐதரசன் சல்பைட்டு நீலப் பாசிச்சாயத்தாளை மென் சிவப்பாக மாற்றும். ஆகவே இது ஒரு மென் அமிலமாகும். அயனாக்கம் நீரில் இரண்டு நிலையில் நிகழும். பிந்தியது குறைந்த அளவில் நிகழும்.

$H_2O + H_2S \rightleftharpoons H_3O^+ + HS^-$

$H_2O + HS^- \rightleftharpoons H_3O^+ + S^{2-}$

காரக் கரைசல்களுடன் தாக்கமுறும்போது ஐதரோ சல்பைட்டையும், சல்பைட்டையும் உருவாக்கும்.

**உதாரணம் :**
i) $NaOH + H_2S \rightleftharpoons NaHS + H_2O$
$OH^- + H_2S \rightleftharpoons H_2O + HS^-$

ii) $NaHS + NaOH \rightleftharpoons Na_2S + H_2O$
$HS^- + OH^- \rightleftharpoons H_2O + S^{2-}$

விளைபொருட்களாகப் பெற்றுக்கொள்ளப்படும் உப்புக்கள் இரு சந்தர்ப்பங்களிலும் நீர் பகுப்பு அடையக்கூடியவையாகும். (மீள் தாக்கம்) ஆகவே இவற்றின் கரைசல்கள் காரவியல்பைக் காட்டும்.

iv) ஐதரசன் சல்பைட்டு ஒரு தாழ்த்தும் கருவியாகும்.

a) இது அலசன்களை அலசன் அமிலங்களாகத் தாழ்த்துகிறது.
உதாரணம் : $H_2S + CI_2 = 2HCI + S\downarrow$

$H_2S + Br_2 \rightarrow 2HBr + S\downarrow$

கந்தகம் மஞ்சள்நிற வீழ்படிவாகக் கிடைக்கின்றது.

b) இது கந்தக வீரொட்சைட்டை கந்தகமாகத் தாழ்த்தும்.
$SO_2 + 2H_2S \rightarrow 3S + 2H_2O$

c) அமிலமாக்கப்பட்ட இருகுறோமேற்றுக் கரைசல்களையும் குறோமேற்றுக் கரைசல்களையும் (இவை அமில ஊடகத்தில் இரு குறோமேற்றுக்களாக மாறும்) தாழ்த்தி குறோமிக் உப்புக்களாக மாற்றும். செம்மஞ்சள் நிறமான இரு குறோமேற்றுக் கரைசல், பச்சை நிறமான நீரேறிய குறோமிக் அயனாக மாறுகிறது.

$K_2Cr_2O7 + 4H_2SO_4 + 3H_2S \rightarrow K_2SO_4 + Cr_2(SO_4)_3 + 7H_2O + 3S\downarrow$
செம்மஞ்சள் பச்சை

$Cr_2O_7^{2-} + 8H^+ + 3H_2S \rightarrow 2Cr^{3+} + 7H_2O + 3S$

d) இது பரமங்கனேற்றுக் கரைசல்களை (ஊதா நிறம்) தாழ்த்தி மங்கனசு அயன் கரைசல்களாக (நிறமற்றது) மாற்றுகிறது.

**உதாரணம் :**
$2KMnO_4 + 3H_2SO_4 + 5H_2S \rightarrow \underbrace{K_2SO_4 + 2MnSO_4} + 2MnSO_4 + 8H_2O + 5S$

(ஊதா) நிறமற்றவை

$2MnO_2 + 6H^+ + 5H_2S \rightarrow 5S + 8H_2O + 2Mn_2+$

a) பெரிக்கு உப்புக்களை பெரசு உப்புக்களாகத் தாழ்த்துகின்றது.

**உதாரணம் :-**
$2FeCI_3 + H_2S \rightarrow 2FeCI_2 + 2HCI + S$
$2Fe^{3+} + H_2S \rightarrow 2Fe^{2+} + 2H^+ + S\downarrow$

b) இது சல்பூரிக்கமிலத்தை கந்தகவீரொட்சைட்டாகத் தாழ்த்துகிறது. நைத்திரிக் கமிலத்தை நைதரசன் ஈரொட்சைட்டாக தாழ்த்துகிறது.

$H_2SO_4 + H_2S \rightarrow SO_2\ 2H_2O + S$
$2HNO_3 + H_2S \rightarrow 2NO_2 + 2H_2O + S$

குறிப்பு: ஐதரசன் சல்பைட்டை உலர்த்துவதற்கு செறிந்த கல்பூரிக்கமிலத்தை உபயோகிப்பதில்லை. உலர்த்த வேண்டுமாயின் பொஸ்பரசு ஒட்சைட்டை அல்லது கல்சியம் குளோரைட்டை உபயோகிக்கலாம்.

**c) வீழ்படிவாக்கல் தொடர்பான தாக்கங்கள்**

பல உலோகங்களின் சல்பைட்டுக்களை வீழ்படிவாக்க பண்பறி பகுப்பில் ஐதரசன் சல்பைட்டு உபயோகிக்கப்படுகிறது. நடைமுறையில் கட்டுப்பாட்டு நிபந்தனைகளை உபயோகித்து இரண்டு வகையான சல்பைட்டுக்களை இனம் காணக்கூடியதாக வகுக்கலாம். பண்பறி பகுப்புத் தொகுதி II ஆம் தொகுதி IV உம் (இவை ஆவர்த்தன அட்டவணை தொகுதிகள் அல்ல)

**தொகுதி II:** அமில ஊடகத்தில் உள்ள உலோக உப்புக்களின் கரைசல்களுக்குள் ஐதரசன் சல்பைட்டைச் செலுத்தினால் இரசம் (II) ஈயம், பிசுமத், செம்பு (II) கட்மியம், ஆசேனிக்கு, அந்திமனி, வெள்ளீயம் ஆகியவற்றின் சல்பைட்டுகள் வீழ்படிவாகும்.

**உதாரணம்:**

$$Pb(NO_3)_2 + H_2S = PbS\downarrow + 2HNO_3$$

கரிய

$$Pb^{++} + H_2S = PbS\downarrow + 2H+$$

**தொகுதி IV:** இத் தொகுதி உலோக சல்பைட்டுகள் அவற்றின் உலோக உப்புக்களின் கரைசல்களை, அமோனியம் குளோரைட்டு, அமோனியம் ஐதரொட்சைட்டு ஆகிய கரைசல்களைச் சேர்த்து கார ஊடகமாக்கிய பின்னர் அதனூடாக ஐதரசன் சல்பைட்டைச் செலுத்தி பெறப்படும். இவ்வாறு வீழ்படிவாவது நிக்கல், கோபால்ற், மங்கனீசு, நாகம் ஆகியவற்றின் சல்பைட்டுக்கள் ஆகும்.

**ஐதரசன் சல்பைட்டுக்கான சோதனை.**

ஈய அசற்றேற்றுக் கரைசலில் தோய்த்த வடிதாளில் ஐதரசன் சல்பைட்டு பட்ட மாத்திரத்தில் கரிய நிறமான ஈயசல்பைட்டு வீழ்படிவாகக் கிடைக்கின்றது.

$$(CH_3COO)_2 Pb + H_2S \rightarrow PbS\downarrow + 2CH_3COOH$$

$$Pb^{++} + H_2S \rightarrow PbS\downarrow + 2H^+$$

**நீரின் இயல்புகளை ஐதரசன் சல்பைட்டின் இயல்புகளுடன் ஒப்பிடுதல்.**

எல்லா ஆறாம் தொகுதி மூலகங்களும் $H_2X$ என்ற பொதுச் சூத்திரமுடைய ஐதரைட்டுக்களை உருவாக்கும். நீரைவிட ஏனைய ஐதரைட்டுகள் நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களாகும். நீர் மணமற்றது. ஏனைய ஐதரைட்டுகள் மணமுள்ளவை. பின்வரும் அட்டவணை ஆறாம் தொகுதி மூலகங்களின் ஐதரைட்டுகளின் பௌதிகவியல்புகளை எடுத்துக்காட்டுகிறது. எமது பாடத் திட்டத்தில் நீரையும் ஐதரசனையும் ஒப்பிடுதல் போதுமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

| இயல்பு | $H_2O$ | $H_2S$ | $H_2Se$ | $H_2Te$ |
|---|---|---|---|---|
| 1. சூத்திரத்திணிவு | 18·0 | 34·0 | 80·0 | 129·6 |
| 2. உருகுநிலை $^0C$ | 0·00 | – 85·60 | – 60·4 | – 51° |
| 3. கொலை நிலை $^0C$ | 100·00 | – 60·75 | – 41·5 | – 1·8° |
| 4. மாறுநிலை வெப்பநிலை $^0C$ | 374·1 | 100·4 | 137 | — — |
| 5. உருகல் மறை வெப்பம் Kcal/mol | 1·435 | ·568 | — — | — — |
| 6. ஆவியாதல் மறை வெப்பம் Kcal/mol | 9·719 | 4·468 | 4·75 | 5·7 |
| 7. தோன்றல் வெப்பம் Kcal/mol | 68·35 | 4·80 | - 18·5 | - 34·2 |
| 8. இருமுனைவுத் திருப்பு திறன் உரிய அலகில் | 1·85 | 1·10 | — — | — — |
| 9. அடர்த்தி (உருகு நிலையில்) gm/mol | 0·958 | 0·993 | 2·004 | 2·650 |
| 10. மின் கூட்டற் பிரிகை 18 $^0C$ யில் | $1·07 \times 10^{-14}$ | $·91 \times 10^{-7}$ | $1·7 \times 10^{-4}$ | $2·3 \times 10^{3}$ |

இவற்றில் சில இயல்புகளைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். பிந்திய அலகுகளில் இவற்றைப்பற்றி அறிவீர்கள்.

பௌதிகவியல்புகளைக் கவனிக்கும் போது நீரின் பலவியல்புகள் அதே தொகுதியில் உள்ள ஐதரசன் சல்பைட்டின் இயல்புகளிலும் (ஏனைய ஐதரைட்டுக்களில் இருந்தும்) வேறுபடுவதை அவதானிக்கலாம். இதற்கான காரணம் நீர் ஐதசன் பிணைப்புக்களைக் கொண்ட தொகுதி அமைப்புக்களைக் கொண்டுள்ளது. ஐதரசன் சல்பைட்டில் இவ்வாறான பிணைப்புக்கள் இல்லை என்பதாகும்.

**இரண்டு பதார்த்தங்களிலும் மூலக்கூறுகள் நேர்கோடற்ற அமைப்பை உடையவையாகும்.**

ஆனால் ஒட்சிசன், கந்தகம் அணுவிலும் அதிக மின் எதிர்மை உடையது. (தொகுதியின் வழியே மின் எதிர்மை குறையும்) மேலும் ஒட்சிசன் அணு கந்தகம் அணுவிலும் சிறிய அணுவாகும். இதனால் ஒட்சிசன் அணு ஐதரசனுடன் ஏற்படுத்தியுள்ள பங்கீட்டு வலுப்பிணைப்பில் உள்ள இலத்திரன்களை தன்பால் கவர்வதால், இவ் ஐதரசன் ஒரு போதியளவு நேர் ஏற்றமுடையதாக இருக்கும். இந்த ஐதரசன் அணு அடுத்துள்ள நீர் மூலக்கூறில் உள்ள எதிர் முனையை போதியளவு வன்மையாகக் கவரும். இக்கவர்ச்சிப் பிணைப்பே ஐதரசன் பிணைப்பாகும். இத் தொகுதியில் உள்ள ஏனைய மூலகங்களுக்கு இத்தகைய பிணைப்பு ஏற்படுத்த முடியாது. ஏனெனில் அவை பெரிய பருமனும் குறைந்த மின் எதிர்மையும் உடைய அணுக்களைக் கொண்டவையாகும். ஐதரசன் பிணைப்பு நீளங்கள் சாதாரண பங்கீட்டுப் பிணைப்பு நீளங்களிலும் நீண்டவை. பனிக்கட்டியின் அடர்த்தி குறைவாகவிருப்பதற்கு ஐதரசன் பிணைப்புக்கள் மூலக்கூறுகளுக்கிடையில் அதிக இடைவெளிகளை ஏற்படுத்துவதாகும். மேலும் இப்பிணைப்புகள் தகர்க்கப்படுவதற்கு அதிக சக்தி தேவை என்பதனால் நீரின் உருகல் மறை வெப்பம் உயர்ந்ததாகவும் இருக்கிறது. மேலும் கொதி நிலைகள் உயர்வாய் இருப்பது, ஆவியாதல் மறைவெப்பம் உயர்வாய் இருப்பது, எஞ்சிய ஐதரசன் பிணைப்புகள் உடைக்கப்பட அதிக சக்தி தேவை என்பதனால் ஆகும்.

## கந்தகவீரொட்சைட்டு $SO_2$

**தயாரிப்பு :** கந்தகம் வளியில் அல்லது ஒட்சிசனில் எரிக்கப்பட்டால், கந்தகவீரொட்சைட்டு உண்டாகும். அதனடன் சிறிதளவு கந்தக மூவொட்சைட்டும் உண்டாகலாம்.

$$S + O_2 = SO_2$$

ஆய்வுகூடத்தில் சோடியம் சல்பைற்றுடன் ஐதான சல்பூரிக்கமிலம் தாக்கமுறுவதனால் பெற்றுக்கொள்ளப்படும்.

$$Na_2SO_3 + H_2SO_4 \rightarrow H_2O + SO_2\uparrow + Na_2SO_4$$

$$SO_3^{2-} + 2H+ \rightarrow H_2O \; SO_2\uparrow$$

ஆய்வுகூடத்தில் செறிந்த சல்பூரிக்கமிலத்துடன் செப்புத்துருவலை வெப்பமேற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

$$Cu + 2H_2SO_4 = CuSO_4 + 2H_2O + SO_2$$

**பௌதிக இயல்புகள் :**

கந்தகவீரொட்சைட்டு ஒரு நிறமற்ற, மூச்சைத் திணற வைக்கும் வாயுவாகும். எரியும் கந்தகத்தின் மணத்தை உடையது. இது நீரில் நன்றாகக் கரையக்கூடியதாகும். $\theta\,^0C$ யில் ஒரு கனவளவு நீரில் 80 கனவளவு வாயு கரையும். இலகுவில் திரவமாக்கலாம். $20^0C$ யில் மூன்று வளிமண்டல அமுக்கத்தினால் திரவமாக்கக்கூடியது. இத் திரவத்தின் கொதி நிலை $20^0C$ ஆகும்.

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை வினாக்களின் விடைகள்

**15 யூன் 2014 ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| 1) 1 | 8) 3 | 15) 3 |
| 2) 2 | 9) 1 | 16) 2 |
| 3) 3 | 10) 2 | 17) 3 |
| 4) 1 | 11) 1 | 18) 2 |
| 5) 3 | 12) 2 | 19) 2 |
| 6) 3 | 13) 1 | 20) 3 |
| 7) 1 | 14) 2 | 21) 1 |

**17 யூன் 2014 செவ்வாய்க்கிழமை**

27) 1

28) 3

29) 2

30) 1

31) பாக்கு, குகை, கைக்கடிகாரம்.

32)

| | | | |
|---|---|---|---|
| 1வி | ண் | மீ | ன் |
| ள | | | |
| க் | | 3மா | 4சி |
| 2கு | கை | | பி |

33) 6 கிலோகிராம்

34) கிளைகள், குளிர், நிழலை

35) க

36)

37) B

38) வசி

39) வசி

40) பவளவிழா

பகுதி II

1) i. கெட்ட

ii. கனி

iii. வீடுகட்ட உதவுதல், உணவு தருதல், வீட்டுப் பாவனைப் பொருள் செய்ய உதவுதல்

iv. இனிய

v. மரங்கள், பலன்கள், முக்கனிகள், செடிகள்

vi. முக்கனிகள்

vii. நான் வளர்க்கும்

viii. நல்ல, இனிய

ix. தென்னை, ஆல், பனை, மா, பலா, வாழை

x. நீண்டு, ஆண்டு - மாவும், தாவும்

02)

i. நரி அவற்றைப் பிடித்துச் சாப்பிட நினைத்தது.

ii. உங்களது வீட்டையும் நீங்கள் வாழும் சூழலையும் தூய்மையாக வைத்திருங்கள்.

03)

i. கிழிந்த ஆடையாயிலும் தோய்ந்துலர்ந்து ஆடையைக் கட்டு



ii. ஒற்றுமையுடன் செயற்பட்டால் நன்மை விளையும்.

04) i. முயற்சி ii. கணினியின் iii. இளநீர்

05) i. Netball ii. Mouth, Head

**20 யூன் 2014 வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| 1) iii | 11) i |
| 2) ii | 12) 10 |
| 3) i | 13) ii |
| 4) iii | 14) i |
| 5) i | 15) iii |
| 6) i | 16) iii |
| 7) iii | 17) i |
| 8) iii | 18) i |
| 9) i | 19) ii |
| 10) ii | 20) iv |


கைதடி மேற்கு உதயநகர் அருள்மிகு அண்ணமார் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகிய போது அடியார்கள் தோத்திரப் பாடல் பாடுவதையும், சுவாமி வீதியுலா வருவதையும், அடியார்கள் அங்கப் பிரதட்சணமும் செய்வதையும் காணலாம். (51)

# "யாவருக்கும் சிறப்பான சூழல்"

# ஊழியர்களுக்கான செயலமர்வு

## தொழில் திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாவருக்கும் சிறப்பான சூழல் எனும் தொனிப்பொருளில், வியாபார கைத்தொழில் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் நிறுவனமும் தொழில் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இச் செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரையும் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் தொழில் திணைக்கள ஆணையாளர் கொடமுன்ன மற்றும் சர்வதேச தொழில் நிறுவனத்தின் தேசிய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் நிஹால்தேவகிரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும சுகாதாரத்தினை உயர்த்தும் நோக்குடன் 'யாவருக்கும் சிறப்பான சூழல் எனும் தொனிப பொருளில் 40 நிறுவனங்களைச் சேர்ந்த 1200 ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக இச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (25)

# மின்னலால் தாக்குண்டவர் 45 நாட்களின் பின் மரணம்

(யாழ்ப்பாணம்)

மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி 45 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்துள்ளார்.

அராலி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிவகரன் (வயது 26) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, கடந்த ஏப்ரல் மாதம் யாழில் பெய்த மழையின் போது கல்லுண்டாய் வெளிப் பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

பல்வேறு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (25,பா)

# பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை முதற்கட்ட கொடுப்பனவு வழங்கல்



(யாழ்ப்பாணம்)

பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிககையில் ஈடுபட்ட 37 பேருக்கு கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண விவசாய, கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் அலுவலகத்தில் வைத்து கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண விவசாய அமைசசர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

விவசாய அமைச்சினால் வடமாகாண சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரத்தினையொட்டி பார்த்தீனிய கொள்வனவை மேற்கொண்டனர்.

அதனடிப்படையில் புத்தூர் கோண்டாவில் அச்சுவேலி, ஏழாலை, மாதகல் போன்ற பிரதேசங்களில் 1 கிலோ பார்த்தீனியம் 10 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கொள்வனவின் அடிப்படையில் அதிகூடிய கிலோவினை விற்பனை செய்த நபர்களுக்கு கொள்வனவுத் தொகை வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்டின், யாழ் மாவட்ட விவசாயப் பணிப்பாளர உட்படப் பலர் கலந்து கொண்டனர். (25)

# "பசுமையை நேசிப்போம்" மரம் நடுகை செயற்திட்டம்



(யாழ்ப்பாணம)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 'பசுமையை நேசிப்போம் என்ற தொனிப்பொருளில் 'ஆர்.ஐ.எஸ்.இ' அமைப்பால் வவுனியா சின்னத்தம்பனை அ.த.க. பாடசாலையில் மரம் நடுகை செயற்றிட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது

இந் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் அமைப்பின் தலைவர் லக்ஸ்மிகாந்த் தலைமையில் நடைபெற்றது.

"பசுமையை நேசிப்போம்" என்ற தொனிப் பொருளில் மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வும் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிகழ்வில் கருத்து தெரிவித்த பாடசாலையின் அதிபர் ஜதீஸ்கரன் மரம் வளர்ப்பதினால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாகவும் இச் செயற்றிட்டத்தை எமது பாடசாலையில் மேற்கொண்டமைக்கு நன்றிகளை தெரிவித்ததோடு அமைப்பின் முன்மாதிரியான செயற்பாட்டிற்கும் தொடர்ந்து அவர்களின் செயற்றிட்டங்கள் வெற்றிபெற வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைப்பின் தலைவர் உலக சுற்றாடல் தினம் தொடர்பாகவும் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் சுற்று புறச்சூழலில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

எதிர்கால சந்ததியினரை பாதுகாக்கும் பொருட்டு இவ்வாறன செயற்றிடங்களை எமது அமைப்பு முன்னெடுத்ததாகவும்,சிறுவயதிலேயே மாணவர்கள் மரம் வளர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை நோக்கி வளர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பாடசாலை சமூகத்தினர் அமைப்பின் பொருளாளர் மோகனகாந்த், உறுப்பினர்களான அனந்தசயன் மற்றும கேசவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (70)

# "வேனில்" சஞ்சிகை வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் காலாண்டு சஞ்சிகையான "வேனில்" சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சங்கத்தின் 38 ஆவது ஆண்டு விழா நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்ற போதே இச்சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்பட்டது.

சங்கத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர் பி.சந்திரசேகரன் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், கேட்கும் திறன் குறைபாடு உள்ளவர்களின கல்வியிலும் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். அவர்களும் அரச சேவைகளில் இணைவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் இதன் போது தெரிவித்தார்.

இந் நிகழ்வில் முதற்பிரதியை ஆர்.ஜி.வர்த்தக நிறுவன உரிமையாளர் பெற்றுக்கொண்டார். சிறப்பு பிரதிகளை வர்த்தக நிறுவனத்தினர், திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றுப் ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டு பெற்றுக் கொண்டனர்.

ஆய்வுரை, வாழ்த்துரையை தொடர்ந்து ஏற்புரையை சஞ்சிகையின் இதழாசிரியை திருமதி பி.நகுலாம்பிகை நிகழ்த்தினார். (23)

# அங்குரார்ப்பணமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வெள்ளாந்தெரு மக்கள் நலன்புர சங்க அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் கடந்த 1 ஆம் திக ஞாயிற்றுக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஜே/ 2 கிராம அலுவலர் என்.எஸ்.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக மு.ஜெ.சுஜீந்திரன் ஜே.பி, பிரதித்தலைவராக, ச.குலேந்திரன், உப தலைவராக பெ.செல்வராஜா, செயலாளராக செல்வன் து.ஐங்கரன், உப செயலாளராக செல்வன் ச.பிரியங்கன், பொருளாளராக செல்வன் து.பிரபாசங்கர் ஆகியோருடன் 9 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இந்தியர்களின் கறுப்பு பணம் 14,000கோடியை தாண்டியது



இந்தியா, அமெரிக்கா உட்பட வெளிநாடுகளில் உள்ளவர்களின் கறுப்புப்பணம் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள வங்கிகளில் 'வைப்புச்' செய்யப் படுகிறது. இதற்காக அந்த நாட்டில் 283 வங்கிகள் உள்ளன. இதில் யூ.பி.எஸ். மற்றும் கிரடிட் சூசி ஆகிய வங்கிகள் மிகப்பெரியவை ஆகும்.

சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் வைப்புச் செய்துள்ள கறுப்பு பணத்தை மீட்க வேண்டும் என்று இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள், கடந்த பல ஆண்டுகளாக குரல் கொடுத்து வருகின்றன. தற்போது ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ள பாரதீய ஜனதா கட்சி, வெளிநாட்டு வங்கிகளில் உள்ள இந்தியர்களின் கறுப்புப்பணத்தை மீட்க நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது.

இதற்காக முதல் கட்டமாக சிறப்பு விசாரணைக்குழு அமைத்துள்ளது. இந்த நிலையில் சுவிஸ தேசிய வங்கியின் மத்திய குழு, வங்கி விதிகளுக்கு உட்பட்டு நேற்றுமுன்தினம் ஒரு புள்ளி விவரப்பட்டியலை வெளியிட்டது. அதன்படி இந்தியர்களின் வைப்பு கடந்த ஆண்டை விட 40 சதவீதம் அதிகரித்து, ரூ.14 ஆயிரம் கோடியை தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் ஈராக்கிற்கு தேவைப்படுகின்றனர்



அமெரிக்காவில் இருந்து 300 இராணுவ ஆலோசகர்கள் ஈராக்கிற்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதாக அமரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் முஸ்லிம் போராளிகளுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்த ஈராக் அரசாங்கம் அமெரிக்காவிடம் உதவி கோரியிருந்தது.

இதன் அடிப்படையிலேயே இவ்வாறு இராணுவ ஆலோசகர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதேவேளை தேவை ஏற்படும் பட்சத்தில் ஈராக்கிற்கு துருப்பினரை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவீத்துள்ளார்.

# கடத்தப்பட்ட 40 இந்தியர்களில் ஒருவர் தப்பி வந்துள்ளார்

ஈராக் வடக்கு பகுதியில் உள்ள மொசூல் நகரில் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த 40 இந்திய தொழிலாளர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்தி சென்றனர். கடத்தப்பட்ட 40 பேரும் நேற்றுமுன்தினம் மொசூல் புறநகரில் உள்ள பஞ்சாலை மற்றும் அரசு கட்டடங்களில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்களை மீக ஈராக் வெளியுறவுத்துறை அதிகாரிகளுடன் மத்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் தொடர்ந்து பேச்சு நடத்திவருகின்றனர்.

இந்த நிலையில் இவர்களில் ஒருவர் தீவிரவாதிகளிடம் இருந்து தப்பிவந்த அவர் ஈராக்கின் வடக்குப் பகுதியில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்றான கிர்பில் நகரில் ஒரு முகாமில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

அந்த இந்திய தொழிலாளி பத்திரமாக இருப்பதாக ஈராக் செம்பிறை சங்க தலைவர் டாக்டர் யாசீன் அப்பாஸ் தெரிவித்தார். தப்பி வந்த இந்திய தொழிலாளிக்கு முழுமையான பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் உறுதிப்படுத்தினார்.



ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகளிடம் இருந்து ஒரு தொழிலாளி மட்டும் தப்பிவந்து இருப்பது மத்திய வெளியுறவுதுறை அதிகாரிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. அவர்கள் அந்த தொழிலாளியுடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேசியுள்ளனர்.

இதற்கிடையே செம்பிறை சங்க மூத்த உறுப்பினர் ஒருவர் கிர்பில் நகருக்கு விரைந்துள்ளார். அங்கு அவர் தப்பி வந்த தொழிலாளியை சந்தித்து பேச உள்ளார்.

இதன் மூலம் கடத்தப்பட்ட மற்ற 39 தொழிலாளர்கள் பற்றிய கூடுதல் தகவல்கள் தெரியவரும். அவர்களை மீட்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு ஜெயலலிதா கடிதம்

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க கோரி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் இந்தியப் பிரதமருக்கு மீண்டும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

11 படகுகளுடன் இரண்டு சந்தர்ப்பங்களில் 47 தமிழக மீனவர்கள் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டிருந்தனர். நெடுந்தீவு மற்றும் தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட அவர்களில் நெடுந்தீவில் கைதான 24 மீனவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் ஜுலை 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கைதான மீனவர்களை அவர்களின் படகுகளுடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, பிரதமர் மோடிக்கு ஜெயலலிதா இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

# மீண்டும் பறவைக் காய்ச்சல்

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா உள்பட ஆசிய நாடுகளில் பறவை காய்ச்சல் பரவியது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் பலியானார்கள்.


கோழி மற்றும் பறவைகள் மூலம் வைரஸ் காய்ச்சல் மனிதனை தாக்கி இந்த காய்ச்சலை ஏற்படுத்தியது. இதனைத்தொடர்ந்து பறவை காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் சீனாவில் புதிய வகை பறவை காய்ச்சல் பரவி உள்ளது. இது முந்தைய பறவைக்காய்ச்சலை விட வீரியம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



புதிய பறவை காய்ச்சலுக்கு சீனாவில் இது வரை 62 பேர் பலியாகி உள்ளதுடன் 433 பேர் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சேவை வரியை நீக்குமாறு நடிகர் விஜய் கோரிக்கை



சினிமாதுறைக்கு எதிராகவும், சினிமா துறையை பாதிக்கும் சேவை வரியை நீக்கி, அழிந்து வரும் இந்திய திரையுலகைக் காப்பாற்றும்படி, பிரதமர் நரேந்திர மோடிக்கு நடிகர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

பல அரிய திட்டங்காளாலும், அதிரடி நடவடிக்கையாலும் இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல போராடும் உங்களுக்கு பாராட்டுக்கள். மற்றத் துறைகளை போன்று சினிமாத் துறையையும் நீங்கள் நேசிப்பவர் என்பதால், இந்த கோரிக்கையை வைக்கிறேன்.

சினிமா மக்களை மகிழ்விக்கும் பொழுது போக்கு சாதனம் மட்டுமல்ல, அரசுக்கு பலகோடி வருவாயை ஈட்டித்தரும் துறையாகும். ஆனால், கடந்த பல ஆண்டுகளாக சினிமா கவனிப்பாரின்றி பல பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. பல திரையரங்கங்கள் கல்யாண மண்டபங்களாகவும், வணிக வளாகங்களாகவும் மாறி வருகின்றன.

இதனால் பல காலங்களாக இந்த தொழிலை மட்டுமே நம்பியிருந்த லட்சக்கணக்கான தயாரிப்பாளர்கள், தியேட்டர் அதிபர்கள், விநியோகஸ்தர்கள், ஏற்றுமதியாளர்கள், நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், சின்னத்திரை கலைஞர்கள் மற்றும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் என அனைவரும் பாதிப்படைந்துள்ளனர் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே சினிமாத்துறைக்கு எதிராகவும், சினிமாத்துறையை நசுக்கி வரும் சேவை வரியை நீக்கி அழிந்து வரும் இந்திய திரையுலகை காப்பாற்றும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். என்றார்.


# அமெரிக்க விமானப்படையிடம் உதவியை கோருகிறது ஈராக்

ஈராக்கில் அரசுப் படைகளுக்கு எதிராக போராடி வரும் 'இசிஸ்', 'இசில்' மற்றும் இதர போராளிக் குழுவினர் அந்நாட்டின் பல முக்கிய பகுதிகளைக் கைப்பற்றி தங்களது ஆதிக்கத்தில் வைத்துள்ளனர்.

தலைநகர பாக்தாத்தையும் கைப்பற்றும் நோக்கத்தில் நாற்புறமும் முற்றுகையிட்டு வரும் எதிரிகளின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் இராணுவம் திணறி வருகிறது. இதற்கிடையில், ஈராக்கில் உள்ள 'கர்பலா' உள்ளிட்ட புனிதத் தலங்களை போராளிகள் தாக்கி அழிக்கக் கூடும் என்ற அச்சமும் மேலோங்கி வருகிறது.

இந்த தாக்குதலை முறியடிக்கும் வகையில் ஈராக்குக்கு இராணுவ உதவி வழங்க தயாராக இருப்பதாக இதுவரை பகை நாடாக இருந்த ஈரான் அறிவித்துள்ளது. இந்நிலையில், போராளிகளை ஒடுக்கி, அழிக்க அமெரிக்க விமானப்படையின் உதவியை ஈராக் அரசு கோரியுள்ளது.

ஈராக்குக்கு அமெரிக்க விமானப்படை அனுப்பப்படுமா? என்ற கேள்விக்கு பதில் அளித்த அமெரிக்க கூட்டுப்



படையின் தலைவரான ஜெனரல் மார்ட்டின் டெம்ப்ஸி. நேரடியாக பதில் அளிக்காமல், 'இசில்' போராளிகளை எங்கே பார்த்தாலும் அவர்களை அழிக்க வேண்டியது நமது நாட்டின் பாதுகாப்பு தொடர்பானது என்று சூசகமாக தெரிவித்துள்ளார். எனவே, ஈராக்குக்கு அமெரிக்க விமானப் படைகள் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இரணைமடு பொதுச்சந்தை இப்போது மக்கள் பாவனைக்கு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெல்சிப் திட்டத்தின் கீழ் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட இரணைமடு பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு புனரமைக்கப்பட்டு வியாபாரிகளின் பாவனைக்கு வழங்கவேண்டிய நிலையில் இதுவரை காலமும் கரைச்சி பிரதேச சபையின் சீரான மற்றும் நேர்த்தியான திட்டமிடல் இன்மை காரணமாக நீண்ட காலமாக இழுபறிப்பட்ட நிலையில் சந்தைக்கான பொதுக கிணறு அமைக்கப்படாமல் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 16.10.2012 ஒப்பந்தம் வழங்கப்பட்டு கடந்த 16.02.2013 அன்று பணிகள் முடிக்கப்பட்டு வர்த்தகர்களின் பாவனைக்கு வழங்கியிருக்க வேண்டும் ஆனால் குறித்த காலத்தில் பணிகள் முடிக்கப்படாத நிலையில் 16.03.2013 வரை ஒரு மாத கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் காலப் பகுதியிலும் பணிகள் முடிக்கப் படாமல் இருந்தமையினால் மீண்டும் ஒரு மாத கால நீடிப்பாக 16.04.2013 வரை வழங்கப்பட்டிருந்து. இருந்தும் இந்தக் காலத்திலும் பணிகள் முடிக்கப் படவில்லை. இவ்வாறு பல தடவைகள் கால நீடிப்பு வழங்கப் பட்டும் பணிகள் முடிவுறுத்தப் படாமல் காணப்பட்டது.

இந்த நிலையில் வர்த்தகர்கள், பொது மக்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என பலரின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைவாக சந்தைக்கான பொதுக் கிணறு அமைக்கப்படாமல் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனினால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இரணைமடு வர்த்தகர்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்த நிலையிலும் மற்றும் பிரதேச, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின் போதும் இரணைமடு சந்தை திறக்கப்படாமல் இருப்பது பற்றி தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையிலும் இப்போது சந்தை கட்டடத் தொகுதி திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு

# யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் புதிய புத்தகங்களின் கண்காட்சி

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் பொதுசன நூலகத்தில் புதிய புத்தகங்களின் கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இக்கண்காட்சியினை யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்.பொதுசன நூலகத்திற்கு அண்மையில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளதாக யாழ்.பொதுசன நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் தெரிவித்தார்.

எனவே, ஒரு வாரம் நடைபெற ஏற்பாடாகியுள்ள இக்கண்காட்சியினை பாடசாலை மாணவர்கள், வாசகர்கள், பொது மக்கள் அனைவரும் பார்வையிட்டுப் பயன்பெற முடியுமென யாழ்.மாநகர சபையின் பொதுசன நூலக சமுகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (25)

# அரசியலில் குதிக்கிறார் ரொய்னோ சில்வா

## ஜனாதிபதி பச்சைக்கொடி

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சகோதரரான ரொய்னோ சில்வா விரைவில் அரசியலுக்கு வரவுள்ளதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் துமிந்த சில்வாவின் வீட்டுக்குச் சென்று இந்த விடயம் குறித்து விசேட பேச்சுக்களை நடத்தியுள்ளதாக ஏசியன் மிரர் ஆங்கில இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆளும் கட்சியின் மூலமாக ரொய்னோ சில்வா அரசியலுக்கு வருவதற்கு ஜனாதிபதி பச்சைக் கொடியை காட்டியுள்ளதாக தெரியவருகிறது.

## அமைதிச்...

படுத்தப்பட்ட குறுஞ் செய்திகள் மூலம் நாட்டில் குழப்பத்தையும் அமைதி யின்மையையும் ஏற்படுத்த முனைகின்றனர். அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் 40 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் விசாரணை செய்யப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிலர் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

தீவிரமான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ஜனாதிபதி, முஸ்லிம் மக்களுடன் நெருக்கமான தொடர்பை வைத்துள்ளவர் இந்தப் பிரச்சினை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர் சகல தரப்பினருக்கும் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் என்னுடன் தொடர்புகொண்டு, கிழக்கு மாகாணத்தில் சுமூக நிலையை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். அந்த வகையில் நான் அம்பாறை மற்றும் மட்டக் களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி வருகின்றேன்.

நிலைமைகளை அவதானித்து வருகின்றோம். சட்டத்தின் மூலம் குழப்பவா திகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் காத்தான்குடி மற்றும் ஏறாவூர், கல்குடா ஆகிய பிரதேசங்களிலுள்ள உலமா சபை பிரதிநிதிகள், பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## அளுத்கமவில்...

சேதம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

முஸ்லிம் விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அரசாங்கம் கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியுள்ளது. முழு அளவில் விசாரணை நடாத்தி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுபலசேனா போன்ற கடும்போக்குடைய தேசியவாத இயக்கங்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டை பின்பற்ற வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலயப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது டன் நின்றுவிடாது, நாட்டின் சகல சிறுபான்மை மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத்து இன சமூகங்களினதும் பங்களிப்புடன் அரசாங்கம் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முனைப்புக்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் இந்த அரசாங்கம் உரிய முக்கியத்துவம் அளிப்பதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## யாழ்.-கிளிநொச்சி...

தீவகம் உட்பட யாழ்.மாவட்ட மக்கள் பெறக்கூடிய நன்மைகள் தொடர்பில் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனாவுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது உள்ள நீர் வழங்கல் திட்டங்களை மேலும் மேம்படுத்துவது, விரிவுபடுத்துவது தொடர்பிலும், மேலும் புதிய நீர்வழங்கல் திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவது குறித்தும் வடிகாலமைப்புத் திட்டங்கள் குறித்தும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர் நிஹால் சமரவீர, மேலதிக செயலாளர் திருமதி. ரஞ்சனி பிள்ளை, ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.தவராசா, வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் டிவகலாலா, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சிவச்சந்திரன், தீவகப் பகுதி முக்கியஸ்தர்கள் மற்றும் துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில்...

பாட்டத்தில் ஈடுபட்டனர். அளுத்கம சம்பவத்தைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாகவும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவது குறித்து முன்கூட்டியே அறிந்திருந்திருந்த நிலையில், பொலிஸார் நகரின் பல இடங்களிலும் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்திருந்த பதாதை களைப் பறித்தெடுத்த பொலிஸார், அவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவிடாமல் தடுத்து அங்கிருந்து இழுத்து அப்புறப்படுத்தினர். பொலிஸாரும் ஆர்ப்பாட்டக்காரர்களும் இழுபறிப்பட்ட போதிலும், அசம்பாவிதங்கள் எதுவும் நடக்கவில்லை.

இதேவேளை, தொழுகையை முடித்துக் கொண்டு வெளியில் வந்த முஸ்லிம்கள் சிலர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து கோஷங்களை எழுப்பிய போதிலும் பலர் அமைதியாக வேடிக்கை பார்த்தனர்.

அருகில் இருந்த தமது வர்த்தக நிலையங்களைத் திறந்து அவர்கள் வர்த்தக நடவடிக்கைககளில் ஈடுபட்டிருந்தனர்.

## மத வன்முறைகளை...

நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக்குழுவின் பணிகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென மேலும் வலியுறுத்தியுள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் "வகிக்கும் இலங்கை, பிரித்தானிய உள்ளிட்ட உறுப்பு நாடுகள் பொதுநலவாய நாடுகள் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு, நல்லாட்சி, ஸ்திரமான அபிவிருத்தி மற்றும் பால் நிலை சமத்துவம் ஆகியவற்றை உறுதி செய்ய இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வலயத்தில் பாலியல் வன்முறைகளை தடுத்து நிறுத்தும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு கடந்த வாரம் லண்டனில் நடைபெற்ற மாநாட்டில், வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கோரியிருந்தமையை ரான்கீன் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் இடம்பெற்ற இன மத வன்முறைகள் வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்அனைத்து இன சமூகங்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜோன் ரான்கீன் வலியுறுத்தியுள்ளார்

## தென்னாபிரிக்க...

குழுவினருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது. வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் அதிகமாக காணப்படுவதாகவும் இதனால் தமிழ் மக்கள் சுயாதீனமான முறையில் செயற்பட முடிவதில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்க வேண்டுமென்ற முனைப்பு அரசாங்கத்திற்கு கிடையாது என சம்பந்தன் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்கா மத்தியஸ்தம் வகித்தாலும் சமாதான முனைப்புக்களை மேற்கொள்ள முடியும் என நம்பவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பள்ளிவாசல்..

வல் அறிந்து பிரதேசவாசிகள் திரண்டு சென்ற நிலையில், தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பியோடியதாகவும், சம்பவம் தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.நகரில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, நேற்று தமிழ் மக்கள், இன்று முஸ்லிம் மக்கள் நாளை? முஸ்லிம் தலைவர்களே இன்னுமா அரசுடன் சல்லாபம். சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான தமிழ், முஸ்லிம் மக்களே ஒன்றுபடுவீர் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைக் கைகளில் ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (25,பா)

## மொழி ஆய்வு...

நிறைவடைவதற்கு முன்னர் கலைப்பீடத்துக்கென அனைத்து வசதிகளுடன் கூடிய மொழி ஆய்வுகூடமொன்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. களனி பல்கலைக் கழகத்தில் பிற ஊடகமொழி ஆய்வு கூடங்கள் நான்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மொரட்டுவ, ருஹுணு ஆகிய பல்கலைக் கழகங்களில் மொழி ஆய்வுகூடங்களை அமைப்பதற்கான அடிப் படை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் தற்போது அனைத்து வசதிகளுடன் கூடிய மொழி ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர் கேந்திர கல்விப் பிரிவு மொழி ஆய்வுகூடமாக தற்போது செயற்படுகிறது.

ராஜரட்ட, சப்ரகமுவ- வடமேல், ஊவ வெல்லஸ்ஸ ஆகிய பல்கலைக்கழகங்களில் மொழி ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நுண்கலை பல்கலைக் கழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மொழி ஆய்வுகூடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

## உலகக்கிண்ண கால்பந்து

பிரேசிலில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் நேற்று நடந்த போட்டியில் 1:0 என்ற கோல் அடிப்படையில் இத்தாலியை வீழ்த்தியது கொஸ்ராரிக்கா.

# தமிழர்களின் உரிமைகளை ஜே.வி.பி. தட்டிப்பறிக்கிறது

## ஐ.தே.க கட்சி கண்டனம்

(கொழும்பு)

யுத்தத்தை ஊக்குவித்து தமிழ் மக்களின் அழிவுக்கு காரணமான ஜே.வி.பி. இன்று 13 ஆவது திருத்தத்தை வழங்கினால் நாடு பிரியும் என்று கூறி, தமிழர்களுக்கு உரிமைகள் கிடைப்பதையும் பறிக்க முயல்கிறது. இதனைக் கடுமையாக எதிர்ப்பதோடு வன்மையாக கண்டிக்கிறேன் என கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதான அமைப்பாளர் சீ.வை.பி ராம் தெரிவித்தார்.

மக்கள் ஆதரவை இழந்துள்ள ஜே.வி.பி. எதிர்காலத்தில் விலாசம் இல்லாமல் போய் விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு புளூமென்டால் வீதியிலுள்ள ராம் நற்பணிமன்ற அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலே ராம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தை அமுல் செய்து அதிகாரத்தை பரவலாக்குவதால் நாடு பிரியும் என்பதில் உண்மையில்லை. இந்தியா, சுவிட்லாந்து போன்ற நாடுகளில் அதிகாரம் முழுமையான அளவில் பரவலாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நாடுகள் பிரியவில்லை.


மாறாக அபிவிருத்திகளை கண்டுள்ளது. மாநிலங்கள் முன்னேற்றங்களை கண்டுள்ளன இது தான் உண்மை. ஆனால், தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க கூடாது. என்ற எண்ணமுடைய ஜே.வி.பி. தனது சுயரூபத்தை 13 உதிர்த்து வெளிக்காட்டியுள்ளது.

வட மாகாண சபை தேர்தலை நடத்திவிட்டால் மட்டும் போதாது. அதற்கான உரிமைகளை வழங்காது இருப்பது எவ்வாறு ஜனநாயகம் ஆகும் தென் பகுதிகளில் மாகாண சபைகள் இயங்குகின்றன இதில் ஜே.வி.பி.யினரும் உறுப்பினர்களாக உள்ளனர்

அப்படி இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கயை வழங்குவதை மட்டும் எதிர்கின்றனர். இது எப்படி நியாயமாகும் ஜே.வி.பி.யினருக்கு ஒரு நியாயம் தமிழர்களுக்கு வேறொரு நியாயம்.

அதிகாரத்தை பரவலாக்கி தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்க வேண்டும் அதை விடுத்து தமிழர்களின் உரிமைகளை பாதிக்கும் ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் உரிமைகளை பறிக்கும் செயலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் விநியோகம்; கட்டமைப்பு திறப்பு



அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான புதிய எரிபொருள் தாங்கிகளைக் கொண்ட கட்டமைப்பு மற்றும் எரிபொருள் டெர்மினல் ஆகியன நாளை ருகுணபுர மஹிந்த ராஜபக்ச துறைமுகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்த, எரிபொருள் கட்டமைப்பை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார். மகம் துறைமுக அபிவிருத்தியின் கீழ் கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த வேலைத்திட்டம் 95 மில்லியன் அமெரிக்க டொலரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கப்பல் எரிபொருள் நிரப்பு அலகு 55000 டொன் முதல் ஆரம்பிக்கப்பட்டு மேலும் தொன்களின் அளவினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மகம்புர துறைமுக அபிவிருத்தி அதிகார சபைச் சேர்ந்த விக்கிரம தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் நேற்று அதிஉச்ச பாதுகாப்பு

தலைநகர் கொழும்பிற்கு நேற்றைய தினம் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சினால் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாட்களில் சில பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் சகல காவல் நிலையங்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். வதந்திகளை பரப்பக் கூடாது எனவும் மக்கள் வதந்திகளை நம்பக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காலத்தின் தேவைக்கு ஏற்ப காவல்துறையின் உளவுத் தகவல் திரட்டும் கட்டமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பேருவளை, அளுத்கம பிரதேசத்தில் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ள போதிலும், பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 50 பேர் வரையில் வீடியோ காட்சிகளின் உதவியுடன் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## விபத்தில் சிக்கி பொலிஸ் அலுவலர் பலி

பலாங்கொடை, பள்ளே கந்தை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன் தினம் இரவு 10.30 அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

கடமையின் நிமித்தம் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே பொலிஸ் கான்ஸ்டபிள் விபத்திற்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓபநாயக்க பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

41 வயதான இந்த பொலிஸ கான்ஸ்டபிள் பலாங்கொடை வேகஹபிட்டிய பகுதியைச் சேர் ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆலயங்களில் வேள்வி தடையின்றி தொடர்கின்றது

### இந்து அமைப்புக்கள் கண்டனம்


(யாழ்ப்பாணம்)

கடும் எதிர்ப்பின் மத்தியில் மிருகபலி வலிகாமத்தில் உள்ள ஆலயங்களில் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் முதல் மிருக பலிக்கு எதிரான ஊடக அறிக்கைகளை இந்து மகாசபை மற்றும் இந்துமத சார்புடைய அமைப்புக்கள் வெளியிட்டுள்ளன.

எனினும் பிரான்பற்று, கீரிமலை, சுழிபுரம் ஆகிய மூன்று பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான கடாக்கள், சேவல்கள் ஆலயத்தின் முன்னாள் கூரிய கத்தி முனையில் பலியிடப்பட்டுள்ளன.

இன்று நவாலியிலும், வலிவடக்கிலும் அடுத்துவரும் கிழமைகளிலும் ஆனைக்கோட்டையிலும் இடம்பெறவுள்ளதாக இந்துமத அமைப்பின் குருபீடாதிபதி கவலை வெளியிட்டுள்ளார். (92)



பளை கச்சார்வெளிப்பகுதியில் டிப்பர் வாகனம் வீதியை விட்டு விலகி பாலத்தின் பாதுகாப்பு கட்டைகளை உடைத்துக் கொண்டு பள்ளத்தில் வீழ்ந்துள்ளதைக் காணலாம். (37)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப் பெண்ணின் சடலம் மீட்பு

ஜெயபுரம் வேரவில் கிராஞ்சிப்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று முன் தினம் மீட்கப்பட்டுள்ளது.

சிறிரஞ்சன் சிறிகலா (வயது - 31) என்பவரின் சடலமே வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டது. சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (81)


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும், துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்திறனும் மிக்க இருபாலரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
தினமுரசு,
இல. 373,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## மின்தடை பற்றிய செய்தி

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை முஸ்லிம் கல்லூரி வீதி, நாவாந்துறை, காரைநகர் வீதியில் ஐந்து சந்தி வரை, அராலி வீதி, சூரியவெளி, நித்தியவெளி, பொம்மைவெளி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாழையடி, மாமுனை, செம்பியன்பற்று, மலப்பை, சூராவத்தை, சுன்னாகம் சிவன் கோவிலடி, சண்டிலிப்பாய், நவிண்டில், பொலிகண்டி, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, இமையாணன், உடுப்பிட்டி, வல்லெட்டி, வல்வெட்டித்துறை, கம்பர்மலை, உடுப்பிட்டி சன சமூக நிலையத்தடி, பொக்கணை, கெருடாவில், தொண்டைமாநாறு, மயிலியதனை, சிதம்பரா கல்லூரியடி, நவிண்டில் ஏ.ஊ, வல்லை, கோண்டாவில் இருபாலை வீதி உணவுக் களஞ்சியம் வரை, நவரட்ண ராஜா வீதி, உணவுக்களஞ்சிய வீதி, நந்தாவில் அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும்

மற்றும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, சண்டிலிப்பாய், மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாழையடி, மாமுனை, செம்பியன்பற்று, தேர்ப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.